விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 29 | ஆனி 21 | துல்ஹஜ்ஜா 8 | இதழ் 134

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 5-7-87

நெடுங்கேணியில்

## பொம்மர், ஹெலி தாக்குதல்

### பலர் கொல்லப்பட்டதாக தகவல்

(முல்லைத்தீவு, நிருபர்)

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த முதலாம் திகதி பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள்மீது பொம்மர், ஹெலிகொப்டர்கள் தாக்குதல்கள் நடத்தின.

இத்தாக்குதலினால் பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டும் சிலர் காயமடைந்துமுள்ளனரென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் முந்திரிகைகுள இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்கும் நோக்குடனே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

இத்தாக்குதலினால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் தொகை சேதம் போன்ற விபரங்கள் உடனடியாக பெறமுடியவில்லையென நமது முல்லைத்தீவு நிருபர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளைத் தேடி இங்குள்ள காடுகளெங்கும் இரு ஹெலிகொப்டர்கள் தாழப்பறந்து தேடுதல் நடத்தின. (ஒ)

● எந்தவொரு வெளிச்சக்தியாலும்

# இந்திய ஆதிபத்திய உரிமையை அச்சுறுத்த முடியாது

## பதில்நடவடிக்கை மேற்கொள்ள தயார் - பாதுகாப்பு அமைச்சர் பந்த்

(புதுடில்லி)

"இந்தியாவின் அண்டைநாடுகளில் நவீனரக ஆயுதங்கள் குவிக்கப்பட்டு வருவதுடன் இந்துமகா சமுத்திரத்தில்வல்லரசுகளின் போக்கும், தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியை குலைத்து வருவதுடன், எமது நாட்டின் பந்தோபஸ்த்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனினும் இந்தியாவின் ஆதிபத்திய உரிமையை எந்தவொரு வெளிச்சத்தியாலும் அச்சுறுத்தமுடியாது. அப்படியானவொரு நிலை உருவானால், பதில் நடவடிக்கையை மேற்கொள்ள இந்தியா எந்நேரத்திலும் தயார்நிலையில் உள்ளது"

இந்திய ஆயுதத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் மாநாடு ஒன்றில் உரையாற்றிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி பந்த் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தனது படை பலத்தை நவீன மயப்படுத்த வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளதாகக்கூறிய அமைச்சர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். இதற்கென பி 72 ரக பீரங்கி தயாரிப்பு துரிதப்படுத்தவுள்ளதாகவும் ஆயுதத்துறையில் 300 பதவிகள் மேலும் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் கூறினார்.

(11ம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கு தமிழர் உள்ளூராட்சிசபை தேர்தலை

### முற்றாகபகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு

நாட்டில் நடைபெற விருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பாரம்பரியமாக வசிக்கும் தமிழ்மக்கள் பகிஷ்கரித்துள்ளார்கள்.

உள்ளூராட்சிச்சபைக்கான வேட்பாளர்களைப் பதிவு செய்

(11ம் பக்கம் பார்க்க)

### விமானகுண்டுவீச்சு 3பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியில் உள்ளபாவற்கொடிச் சேனையில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சு சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டதாகவும், வாடிகள் சில தீக்கிரையானதாகவும் மட்டக்களப்பு பிரஜைகள்குழுவுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இக்குண்டுவீச்சுச்சம்பவம்நடைபெற்றது.

தொண்டமானாற்றில்

## புலிகளின் கண்ணிவெடிக்கு பல இராணுவத்தினர் பலி

### ட்ரக் முற்றாக சேதமடைந்தது

யாழ்ப்பாணம் ஞாயிறு

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள், ட்ரக்வண்டிகளில் வெளியே வந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் சமர் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தினர் பயணம் செய்த ட்ரக் வண்டியொன்றின் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் கண்ணிவெடித்

(12-ம் பக்கம் பார்க்க)

"இந்திய உணவு விநியோகம்

## வெறும் வயிற்றுப்பிரச்னை அல்ல வாழ்க்கைப்பிரச்னை தீர்வுக்கானஅடிப்படை"

### அன்டன் பாலசிங்கம் நம்பிக்கை

[சென்னை]

"இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் உணவு வெறும் வயிற்றுப் பிரச்னைக்கான தீர்வு அல்ல. வாழ்க்கைப் பிரச்னை தீர்வுக்கான அடிப்படையே இதுவாகும்" என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் கூட்டமொன்றில் பேசும் பொழுதே திரு. பாலசிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய திரு. பாலசிங்கம்:- சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகிஇருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு இந்தியாவின் உதவி என்றும் இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்ததுடன் இந்திய உணவுப்

(11ம் பக்கம் பார்க்க)

அலஸ் விசாரணைக் கமிஷன்

### 9ம் திகதிமுதல் இயங்கும்

(அலுவலக நிருபர்)

கடந்த மார்ச் மாதம் 30ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலை மீது கோட்டையிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தவென ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் நியமிக்கப்பட்ட 'அலஸ் விசாரணைக்கமிஷன் இம்மாதம் ஒன்பதாம் திகதிமுதல் இயங்கவுள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

அல்போன்சஸ் அத்தனாசியார் வைத்தியசாலை

பண்டத்தரிப்பு

இன்றுதொடக்கம்

சிகிச்சை வழமைபோல் நடைபெறும்

★ காரைநகர் ஆலடி வைத்தியசாலையில் ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் 7-00—10-00 மணி வரை.

வைத்தியர்

அல்போன்சஸ் அத்தனாசியார்.

சி-9690

இந்தியாவுடனான பிணக்கில்

## அமெரிக்காவும் பிரிட்டனும்கூட உதவிக்கு வரவில்லையே!

### ஜே. ஆர். அரசை சாடுகிறார் சிறிமா

[நமது நிருபர்]

"இந்தியாவுடனான இன்றைய பிரச்னையில் சீனாமாத்திரமே வெளிப்படையாக அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. பாகிஸ்தானும் பங்களாதேசும் சிறு அளவில் "சத்தம்" செய்துள்ளன. இந்த அரசின் நண்பர்களான பிரிட்டனும் அமெரிக்காவும் கூட எமக்கு உதவிக்குவரவில்லை".

இவ்வாறு முன்னாள் பிரதமரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு காம்பெல்பார்க்கில் நடைபெற்ற ஆறு எதிர்க்கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

எதிர்கட்சிகளுக்கிடையில் இன்று கருத்து வேறுபாடு இருக்கலாம் ஆனால் பொதுத் தேர்தலை நடத்துமாறு கோரு

(11ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

டிசம்பரில் சனிமாற்றம், ஜோஸ்பரின் சனிமாற்றப் பலன்கள் வெளிவந்துள்ளன. அதிக பக்கங்கள், மூவர்ண அட்டை. மூன்று ரூபா தபால் தலை அனுப்பினால் முகவரிக்கு அனுப்பப்படும். ஐயா சச்சிதானந்தன், 12, விதானையார்வீதி, யாழ்ப்பாணம். சி-9708

வீட்டுப் பாவனையிலிருந்த ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு தொடர்பு: கருணாகரன் ஜெயபதி, துரைவீதி, இணுவில் தெற்கு. [சி-9680]

பண்டத்தரிப்பு பட்டின சபை எல்லைக்குள் சண்டிலிப்பாய் வீதியில் முல்லையடிக்கு அண்மையில் இரண்டு பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ சிவக்கொழுந்து, சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. சி-9664

ஒகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி. "பொதுஅறிவு பொதுஉளச்சார்பு" புதிய பதிப்பு 1984, 87 ஆண்டு வினா விடைத்தாள்களையும் உள்ளடக்கியது. விலை ரூபா 49-50, பூபாலசிங்கம்புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறவிரும்பின் அஸ்ரன்இன்ஸ்ரிரியூட் 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9554

பிரம்பு/சாதாரண கோல்செற், Ceiling Fan, மாணவர் படிக்கும் மேசைகள், அலுமாரிகள், கட்டில்கள், கதிரைகள், சாப்பாட்டுகதிரை மேசைகள், Towel Rack, Mini Ice Cream Beater, மணிக்கூடுகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. [சி-9683]

National 17" B/W T.V Sony கசற்றேடியோ Olivetti Portable Typewriter. Asia ஆண்கள்சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; G. வில்லியம், அலுக்கைச்சந்தி, அளவெட்டி. சி-9694

உரும்பிராய் கோப்பாய் றோட்டில் வைரவர் கோயிலுக்கு அண்மையில் பண்டிதர் நவரத்தினம் வீட்டிற்கு முன் 5½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. க. முத்துதம்பி, கோப்பாய் றோட், உரும்பிராய். சி-9713

(Calbirds) இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலன்காடு, சுன்னாகம். சி-9705

தஞ்சாவூர் சுருதிப்பெட்டி விற்பனைக்குண்டு. மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சி-9709

Nallur Farm Centre எல்லா வகையான கோழித்தீன்கள், அரைத்தசோயா, தரமான பிண்ணாக்கு, மீன்தூள், மருந்துவகைகள், உபகரணங்கள், தரமானமுட்டைமற்றும் நாய்களுக்கும் வளர்ப்பு மீன்களுக்கும் குருவிகளுக்கும் ஏற்ற சாப்பாடுவகைகள், மருந்துகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-9682

## விற்பனைக்கு

புதிய ZX81 Zinclair Computer Key Board ஒன்று விற்பனைக்குண்டு. 20/4, ஸ்ரான்லி வீதியில் வியாபார நேரத்தில் பார்வையிடலாம். சி-9707

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி ஆனைக்கோட்டைறோட்டில் 1 பரப்பு முகப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு பொன்னையா துரைராசா கொக்குவில் மேற்கு, கொக்குவில். சி-9706

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் பழனி ஆண்டவர் கோயிலுக்கு அண்மையில் இரண்டு காணிகள் 3 பரப்பு, 2 பரப்பு என்ற அளவில் வீடு கட்டக்கூடியது விற்பனைக்கு உண்டு. இ. பாலசுப்பிரமணியம். பழனிஆண்டவர் கோயில் கோண்டாவில். சி-9712

முற்றிலும் கண்ணாடியினால் செய்யப்பட்ட மீன்வளர்ப்பு தொட்டிகள் பிளாஸ்டிக் உபகரணங்களும் பனசோனிக் 3 in one Set இரண்டு ஸ்ப்பீக்கர்களுடன்விற்பனைக்குண்டு. No 131. அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். சி-9714

வீடுகட்டுவதற்கு உகந்த அரிந்த கொங்கிறீற்கற்கள் தேவையானஅளவு விற்பனைக்குண்டு. கீழ்குறிப்பிட்டுள்ள முகவரியில் ஏனைய விடயங்களுக்குத் தொடர்புகொள்ளவும்: M. சிவமூர்த்தி, வீடியோ கலாமினி, டச்றோட், சாவகச்சேரி. [சி-9686]

## வகுப்புக்கள்

1988, G.C.E. O/L ஆங்கிலப் பரீட்சை. புதிய பாடத்திட்டம். Year 8, 9, 10 ஆங்கிலப் பாடப் புத்தகங்களின் அடிப்படையில் வகுப்புக்கள் ஆரம்பம். தொடர்புகொள்க: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி-9522)

ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர்தெரிவு போட்டிப் பரீட்சைக்கான 1 மாதகால துரிதபயிற்சிவகுப்புக்கள் ஆரம்பம்: 11-07-87 பாடநெறி, பொது அறிவும் பொதுஉளச்சார்பும் பல ஆசிரியர்களின் இணைந்த சேவை. கட்டணம் ரூபா 100/- மட்டுமே. தொடர்பு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 101/10, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி-107]

108.Brown Rd, Jaffna A/L 88 சேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 8-7-87 புதன். 4-45 p m. (திங்கள், புதன், 4.45 P.m ) (சி 9700)

A/L English Literature, O/L English வகுப்புக்களும் ஏனைய ஆங்கில வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஆங்கிலம் கற்பதில் ஆர்வமுடைய ஒவ்வொருவருக்கும் வழிவகை செய்து கொடுக்கப்படும். முகவரி: வி கோவிந்தபிள்ளை, 218, பலாலி வீதி, கந்தர்மடம். (சி 9698)

## தேவை

இலுப்பம், வேப்பம் விதைகள் தேவை மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ 126)

யாழ் நகரிலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பெண் லிகிதர் தேவை. க. பொ த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவரும், கணக்கியல் அனுபவமுள்ளவரும், தட்டெழுத்து வேலையில் அனுபவமுள்ளவராகவும் இருக்கவேண்டும் வயதெல்லை 20-30 யாழ். நகர சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன் அனுபவங்களையும், தகமைகளையும் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர இல ஏ 136, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம் (ஏ 136)

## CLASS

Commencing shortly second batch of students for training in Bharatha Natyam (Vahzuvoor Style) by experienced teacher trained by Vahzuvoor Ramaiya Pillai himself. For further details Contact: 178, Navalar Road, Jaffna (C 9710)

## தவறிவிட்டது

சண்முகம் கனகம்மா எனும் பெயருடைய பென்சன் காட்டும், வவுச்சரும், கோப்பாய் வங்கி வைப்புப் புத்தகமும். கோப்பாய் வங்கிக்கு அருகாமையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஆறுமுகம் சண்முகம், இருபாலை கிழக்கு, கோப்பாய் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் [சி-9704]

1½ பவுண் பெறுமதியுள்ள கைச் சங்கிலி ஒன்று 3-7-1987 அன்று பெருமாள் கோயில்-வீரமாகாளி அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட வீதியில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் அளிக்கப்படும். 66/8, 5th Lane, Brown Road, Jaffna, [சி-9693]

## மணப்பந்தல்

ஸ்ரீமன் கத்தோலிக்க வேளாள குலத்தைச் சேர்ந்த பெற்றோர் சங்கீதம், மணியம் கணக்கியல் தேர்ச்சிபெற்ற B.Sc (Bio-Science பட்டதாரி) யான 30வயது 5அடி, பொதுநிறமான தற்போது கொழும்பில் தனியார் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் மகளுக்கு மணமகன் தேடுகின்றார்கள். மணமகன் அதே சாதி, சமயத்தவராகவும், நற்பண்புள்ளவராகவும், தனியார்துறையிலோ, அரசாங்க வங்கி, வர்த்தக ஸ்தாபனத்திலோ நிரந்தர பணிபுரிபவராகவும் இருத்தல் வேண்டும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு, நகை, ரொக்கம் சீதனமாக வழங்கப்படும். மனுச்செய்க. விளம் இல சி-9689, C/o ஈழநாடு, தபால் பெட்டி இல. 49, யாழ்ப்பாணம். [சி-9689]


## Special Computer Programming Course

TWO WEEKS—FULL TIME.

Specially designed for those who wish to travel abroad within a short time.

BASIC LANGUAGE-with Practicals on Apple II Computer.

Only six vacancies left for students.

Class commence on 6th July 1987 at 9 a. m.

PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES
59, St. Patrick's Road, Jaffna.

(A 135)


# பருத்தித்துறையை மீண்டும் இயங்கச்செய்ய முயற்சி

(நெல்லியடி)

பருத்தித்துறையில் தற்போதுள்ள இராணுவமுகாமை முனை எனற வெளிச்சவீட்டுப் பகுதிக்கு இடமாற்றஞ்செய்து மீண்டும் பருத்தித்துறை நகர, வங்கிகள், ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி, நீதிமன்றம் ஆகியவற்றை இயங்கச் செய்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

பல மாதங்களாகமூடப்பட்டிருக்கும் கோட்டு வாசல் கோவில் எனப்படும் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி ஆலயமும் மீண்டும் திறந்து கிரமமான பூசைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிகின்றது.

# வடமராட்சிப்பகுதியில் 83 பாடசாலைகள் செயல் இழப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் எண்பத்திமூன்று பாடசாலைகள் இயங்கவில்லை இதனால் முப்பத்தி மூவாயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வரமராட்சியிலுள்ள கல்லூரி அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

வவனியா வீகராதிபதி வணசீயம்பல கஸ்வல விமலசார தேரோவைச் சந்தித்த வடமராட்சி மாணவர்களின் கல்வி நிலைபற்றி எடுத்துக்கூறிய இவ் அதிபர் தேரோவிடம் மேலும் கூறியதாவது; வடமராட்சியில் சுமுக நிலை ஏற்படவேண்டுமானால் தற்போது இங்கு முகாமிட்டுள்ள இராணுவம் வாபஸ் பெறவேண்டும். இந்த இராணுவத்தினரைக் கண்டவுடன் மக்கள் அச்சமடைகின்றனர். இதனால் பதற்றமான சூழலிலே இங்குள்ள மக்கள் வாழ்கிறார்கள்.

# அச்சுவேலிஇடைக்காடு பகுதியில் இந்திய நிவாரணப்பொருள்

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான "இந்திய நிவாரண உணவுப் பொருட்கள்" நேற்று 4ம் திகதி சனிக்கிழமை தொடக்கம்வரும்7ம் திகதிசெவ்வாய்க்கிழமை வரை வழங்கப்படவுள்ளன.

4ம் திகதி சனிக்கிழமையும், 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நீர்வேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று இடங்களிலும் வைத்து வழங்க ஏற்பாடாகியிருக்கின்றது.

6ம் திகதி திங்கட்கிழமையும், 7ம் திகதி செவ்வாய்க்கிழமையும் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி, சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம் ஆகிய மூன்று நிலையங்களிலும் வழங்கப்படும்.

இந்திய உணவுப் பொருட்கள் விநியோகம் தொடர்பான தீர்மானங்கள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கை, யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பல பிரமுகர்கள் உணவு விநியோகத்தில் கலந்துகொள்கின்றனர்.

அச்சுவேலி பத்தமேனிப் பகுதிப் பிரஜைகள் குழு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான உணவு விநியோகக் குழு என்பன நிவாரண உணவுப் பொருட்கள் தொடர்பான ஏற்பாடுகளை அவ்வப்பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்துசெய்துள்ளன.

## மணப்பந்தல்

யாழ். ஸ்ரீமன் கத்தோலிக்க லீவில் நிற்கும் சவுதியில் சாரதியாக பணிபுரியும் 28 வயதுடைய மணமகனுக்கு பெண் தேவை. தொடர்பு:- ABCDE விவாகம் பொருத்துனர் 91/10, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம். (சி-9702)

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பாங்கில் உத்தியோகம் பார்க்கும் 30 வயதுடைய திருவோண நட்சத்திர மாப்பிள்ளைக்கு பெண் தேவை. தொடர்பு:- ABCDE விவாகப் பொருத்துனர், 91/16, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம். [சி-9703]

எமது சேவையில் எஞ்சினியர், டாக்டர், எக்கவுண்டன் மாரின் சாதகங்கள் அதிகம் உண்டு. உடன் விவாகம் பொருத்த விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். ABCDE விவாகம் பொருத்துனர், 91/16, இந்துமகளிர் வீதி, கந்தர்மடம். [சி-9701]

# லொறி குடைசாய்ந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்று நீர்வேலி தச்சர் மடத்தடியில் குடை சாய்ந்ததில் லொறி சாரதி உட்பட பலர் காயமுற்றனர்.

ஆயினும் உயிர்ச் சேதமெதுவும் ஏற்படவில்லை. அருகிலுள்ள கட்டடம் மின் கம்பங்கள் யாவும் பலத்த சேதத்திற்குள்ளானது. இச் சம்பவத்தினால் குறிப்பிட்ட பகுதி மின் விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. [க]

# அகதிகளுக்கு உதவக் கோரிக்கை

யாழ்-ஞாயிறு

தம்பாலை வளலாய் இடைக்காடு பத்தமேனி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து இருபாலை கோண்டாவில் வீதியிலுள்ள மகாவித்தியாலயத்தின்பின்புறத்தில் தஞ்சமடைந்துள்ள 180 பேருக்கு உதவி வழங்குமாறு இவர்களை கவனித்துவரும் இருபாலை நலன் காக்கும்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவர்களில் மாணவர்களாயுள்ள 45 பேருக்குஅப்பியாசக் கொப்பிகளை மில்வைற்அதிபர் திரு. கனகராசா வழங்கினார். சிறுவர்களுக்கான பாலர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வோதயம்அமைப்பும் ஊர்பொதுமக்களும், தொழில் நிறுனங்களும் உணவுப் பொருட்களைவழங்கி வருவதாகவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை இரவு நண்பகல் போசனங்களிற்கான உபஉணவுப் பொருட்கள் இன்னமும் தேவைப்படுவதனால் இயலுமானோர் இவற்றை நன்கொடையாக அளிக்குமாறும் இந்த ஸ்தாபனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர் (ஊ)

# வளைகுடாவில் 'பீரங்கிபடகு' ராஜதந்திரம் வேண்டாம்!

## அமெரிக்காவிடம் சோவியத் வேண்டுகோள்

மாஸ்கோ, ஜூலை, 4.

**வளைகுடாப் பகுதியில் போர்க் கப்பல்களை நிறுத்தி' "பீரங்கிப்படகு ராஜதந்திர"த்துக்குவழிகோலவேண்டாம் என்று சோவியத் யூனியன் அமெரிக்காவைக் கேட்டுள்ளது வளைகுடாப் பகுதியில் அமெரிக்க யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனையடுத்தே சோவியத்யூனியன் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளது.**

ஈரான், ஈராக் யுத்தம் தீவிரமடைந்ததையடுத்து, வளைகுடா கடல் பகுதியில் கப்பல் போக்குவரத்து அச்சுறுத்தல்களுக்குளளாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதியின் கடல் போக்குவரத்துக்கு தான் பாதுகாப்பளிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இந் நடவடிக்கையின் முதற் கட்டமாக குவைத் நாட்டைச் சேர்ந்த அமெரிக்கக் கொடிகளைத் தாங்கிய எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதையடுத்தே வளைகுடாப் பகுதியில் பீரங்கிப்படகு ராஜதந்திரத்தை ஏற்படுத்த வேண்டாமென சோவியத் யூனியன் அமெரிக்காவிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் வளைகுடா யுத்தத்தை இந்த 'பீரங்கிப் படகு ராஜதந்திரம்' மூலம்ஒரு உலக மகாயுத்தமாக்க வேண்டாமெனவும் சோவியத் யூனியன் எச்சரித்துள்ளது.

இதேவேளை வளைகுடாவில் எந்தவொரு அமெரிக்க இராணுவ அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

## வேலி, குடிசைகளுக்கு தீவைக்கிறார்கள்

(அச்சுவேலி நிருபர்)

இடைக்காடு வளலாய் பகுதியில் இராணுவத்தினர் வேலிகளுக்கும், குடிசைகள், வீடுகளுக்கும் தீயிட்டுக் கொளுத்தி நாசவேலைகளில் ஈடுபடுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இடைக்காடு, வளலாய் பகுதியில் வீடுகளுக்குபாதுகாப்புக்காக பொதுமக்களால் அமைத்திருந்த வேலிகளை இராணுவத்தினர் தீயிட்டுக்கொழுத்துகின்றனராம்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இராணுவத்தினர் தீவைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகக்கூறப்படுகின்றது.

தமது வீடுகளைப் பார்ப்பதற்குப் பதுங்கி ஒளித்து செல்லும் பொதுமக்கள் வீடுகள் இருந்த இடங்களில் புகை வெளிவந்து கொண்டிருப்பதை அதிர்ச்சியுடன் அவதானித்துவிட்டுத் திரும்புகின்றனர்.

## "நீதி, நியாயத்தின் வெற்றியை இந்திய கலைஞர்கள் உறுதிப்படுத்துகின்றனர்!" — கோபர்சேவ்

மாஸ்கோ, ஜூலை 4.

"மானிட உணர்வின மகத்துவத்தைப் போற்றி நீதி, நியாயம் என்பவற்றின் வெற்றியை இந்தியக் கலைஞர்கள் உறுதிப்படுத்தி வந்துள்ளனர்" என்று சோவியத் அதிபர் திரு. மிக்கேஸ் கோபர்ச்சேவ் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் இந்திய விழாவினை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே திரு. கோபர்ச்சேவ்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:- "மாஸ்கோவில் இடம் பெறும் இந்தியவிழா இந்திய-சோவியத் உறவில் புதியதொரு சகாப்தத்தை உருவாக்கியுள்ளது.

நூற்றுக் கணக்கான சோவியத் நகரங்களைச் சேர்ந்த மக்கள் இந்திய விழாவை வருடம் பூராகவும் கண்டுகளிக்க ஆவலாக உள்ளனர்" என்றார்.

மாஸ்கோவில் இந்தியவிழா இருநாட்டு தேசிய கீதங்களுடனும் குதூகலமாக ஆரம்பமானது இந்தியர்களின் வாழ்க்கை முறையினைச் சித்தரிக்கும் திரைப்படமொன்று பல திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டது. அத்துடன் படகு ஓட்ட நிகழ்ச்சி, மற்றும் நடன நாடக நிகழ்ச்சி என்பனவும் நேற்றைய விழாவில் முக்கியம் பெற்றிருந்தன.

மாஸ்கோ இந்திய விழா:

## 'இணைந்து, கலந்து, ஒன்றுவதே இந்திய நாகரிகம்' — மாஸ்கோவில் ராஜீவ்

மாஸ்கோ, ஜூலை 4

"இணைந்து, கலந்து ஒன்றுவதே பாரத நாகரிகத்தின் சிறப்பம்சமாகும். இதன் காரணமாகவே கடந்த 5 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாகரீகம் தளைத்தோங்கி வருகிறது" என்று இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.



சோவியத் யூனியன் தலைநகரான மாஸ்கோவில் ஓராண்டு கால இந்திய விழாவை சோவியத் அதிபர் திரு. மிக்கேல் கோபர்ச்சேவுடன் சேர்ந்து திரு. ராஜீவ் காந்தி நேற்று மாலை ஆரம்பித்து வைத்தார். அப்போது அங்கு அவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. காந்தி மேலும் கூறியதாவது:- சோவியத், இந்திய உறவுகள் இருநாட்டினதும் கலைஞர்கள் எழுத்தாளர்களால் காலத்துக்குக் காலம் நன்கு பலப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

சோவியத் எழுத்தாளரான திரு லியோ டோல்ஸ்டாயின் வாழ்க்கை முறைகள்மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தன" என்றார்.

## 73வயது நாஸிகுற்றவாளிக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை

பாரிஸ், ஜூலை 4

கிளாஸ்பார்பி என்ற 73 வயதான ஜேர்மன் நாஸிக்குற்றவாளி ஒருவருக்கு பிரான்ஸின் லியோன் பிரதேச உயர் நீதிமன்றம் ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

1944ம் ஆண்டு ஹிட்லரின் நாஸி இராணுவத்தில் பணிபுரிந்த பார்பி 44 யூத சிறுவர்கள் நச்சு வாயுக் கூடங்களில் மூச்சுத்திணறி மரணமடைந்ததற்கும், பல யூதர்கள் கைது செய்யப்பட்டதற்கும், கடத்தப்பட்டதற்கும் காரணமாகவிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக 17 குற்றச்சாட்டுக்கள் பார்பி மீது சுமத்தப்பட்டிருந்தன.

9 ஜூரர்கள் கொண்ட நீதிமன்றில் 3 நீதியரசர்கள் முன்னிலையில் பார்பி மீதான விசாரணைகள் இடம்பெற்றன.

கடந்த இரு மாத காலமாக இடம்பெற்ற இவ் விசாரணைகள் நேற்று முடிவடைந்தன. தொடர்ந்து 7 மணித்தியால பரிசீலனையின் பின்னர் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. பார்பி மீது ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும் நீதிமன்றத்தினுள் நின்றவர்களும், வெளியே நின்றவர்களும் பலத்த மகிழ்ச்சி ஆரவாரஞ்செய்தனர்.

பார்பிக்கு இத் தீர்ப்பை மேன்முறையீடு செய்ய 5 தினங்கள் அவகாசமளிக்கப்பட்டுள்ளது.

கனேடிய படைகளிலுள்ள———

## பெண்களுக்கு 'கனரக' யுத்தப்பயிற்சிகள்!

மொன்ட்றியல், ஜூலை 4

கனடாவில் முப்படைகளிலும் உள்ள பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான அனைத்து கனரக யுத்தப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

கனேடிய பாதுகாப்புத்துறை அமைச்சர் பெக்ஸ டிற்றி இத்தகவலை வெளியிட்டார்.

யுத்த விமானங்கள், ஹெலிகாப்டர்களை ஓட்டுதல், நாசகாரிக்கப்பல்கள், பீரங்கிப்படகுகளைச் செலுத்துதல், டாங்கிகள் மற்றும் கனரக வாகனங்களை இயக்குதல் என்பனஇந்த பயிற்சிகளில் அடங்கும்.

இதுவரை காலமும் கனேடியப் படைகளில்இருந்த பெண்களுக்கு தீவிரயுத்தப் பயிற்சிகள்வழங்கப்படவில்லை. ஆனல் காலத்தின் தேவைகருதியே அவர்களுக்கும் ஆண்களுக்கு நிகராக பயிற்சியளிக்கப்கடவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சிகளின்முதற்கட்டமாக விமானங்களை ஓட்டும் பயிற்சி வழங்கப்படும். தொடர்ந்து கடற்படை இராணுவத்தில் ஏனைய கனரகப்பயிற்சிகள் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

'நேட்டோ' நாடொன்றின் படையில்பெண்களுக்கு கனரக இராணுவப்பயிற்சி அளிக்கும் முதலாவதுநாடு கனடாஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அராலியில்

## வீதி அபிவிருத்திவேலைகளுக்கு ரூ. 13 லட்சம் நிதி ஒதுக்கீடு

(வேலணை)

வடக்கு அராலித்துறை முகத்தில் இருந்து 786 இலக்க பஸ்ஸின் பிரதான பாதை வரையிலான வீதியினை திருத்தி அமைப்பதற்கும் அராலிக்கடல் பிராந்தியத்தில் கடலில் புதிதாக 300 அடிக்கு புதிய வீதி அமைப்பதற்குமாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினுல் யாழ் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பதின்மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வீதி திருத்த வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தை உடனடியாக பயன்படுத்தி வேலைகளை ஆரம்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதற்கு அமைய ஆரம்ப வேலையாக கல் பறிக்கப்படுகின்றது கடலுக்குள் அமைப்பதற்கான புதிய வீதி அமைப்பு வேலைகளும் இவ்வாரத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதே நேரத்தில் வேலணைப் பகுதியில் உள்ள அராலித்துறையில் இருந்து கடலுக்குடாக அமைக்கப்பட்டுவரும் புதிய பாதையும் வெகு சிரமங்களின் மத்தியில் பொது மக்களின் நிதியுதவியுடன் இதற்கென அமைக்கப்பட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 800 அடிவரை இக்குழுவினரால் அமைக்கப்பட்டு விட்டன.

## காயமடைந்தவர் மரணமானார்

யாழ்ப்பாணம், சனி.

கடந்த 30-ம் திகதி யாழ். கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினுல் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த திருமதி பரிமளம் செபமாலை (53 வயது) [2-ம் குறுக்குத் தெரு] என்பவர் நேற்று முன்தினம்அதிகாலை மரணமானார்.

யாழ் குடாவுக்கு ——

## மேலும் 4 கப்பல்களில் இந்திய நிவாரண உதவி!

புதுடில்லி, ஜூலை 4

யாழ் குடா நாட்டுக்கு மேலும் 4 கப்பல்களில் நிவாரண உதவிகளை இந்தியாவழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இருநாடுகளினதும் நட்புறவை வளர்க்கும் நல்லெண்ண அடிப்படையிலேயே இந்த உதவிகளுக்கு இலங்கை அனுமதித்துள்ளதாக இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

1300 தொன்கள் உணவுப் பொருள்களுடன் இந்த 4 கப்பல்களும் யாழ் குடாநாட்டுக்குச் செல்லவுள்ளன.

சுமார் பத்தாயிரம் தொன்கள் உதவிப்பொருள்களை இந்தியா யாழ் குடாநாட்டுக்கு வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவிட்டபுரம் பகுதியின் நிலைமை—

# சுமார் 20 வீடுகள் தரைமட்டம்

## எஞ்சிய வீடுகளுக்குரிய சாமான் இல்லை

[மாவிட்டபுரம் நிருபர்]

கடந்த 7ம் திகதி திடீர் ஊரடங்கு அறிவித்தல் விடுக்கப்பட்டதிலிருந்து மக்கள் செல்ல முடியாதிருந்த மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்கு 23 தினங்களின் பின்பு கடந்த 30ம் திகதி, 1ம் திகதிகளில் பொதுமக்கள் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

இதைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அப்பகுதி மக்கள் முண்டியடித்துக் கொண்டு தமது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்றனர். அதில் ஒருவனுக நானும் சேர்ந்துகொண்டேன். இராணுவ கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசத்திற்குள் சாதாரண மனத்திடத்துடன் செல்லமுடியாது என்றாலும் நான் குடியிருந்த வீட்டை ஒருமுறை பார்த்துவிடவேண்டும் என்ற ஆவலில் மனத்தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன்.

மாவிட்டபுரம் அரசடிச் சந்தியை அடைந்ததும் இருதயம் வேகமாக அடித்தது. ஆனாலும் மக்கள் தொகை அப்பகுதியில் அதிகரித்திருந்ததால் மனதில் தெம்புபிறந்தது. முன்னேறிச் சென்றேன். மாவிட்டபுரம் அரசடிச்குச் சமீபமாக இருவீடுகள் தரைமட்டமாகியிருந்தன. மாவிட்டபுரம் சந்திக்குச் சற்றுத் தொலைவில் சென்றதும் இராணுவ நடவடிக்கையைப் பறை சாற்றுமாப்போல் கட்டிடங்கள், வீடுகள் இடிந்து தரைமட்டமாகியிருந்தன. அவ்விடத்தில் ஒரு இராணுவ தரிப்பிடம் இருந்தது. அங்கு சென்று அடையாள அட்டையைக் காண்பித்து அனுமதி பெற்றுக்கொண்டேன்.

### அந்த இடமா இது?

அவ்விடத்தைச் சுற்றுமுற்றும் நோட்டம்விட்ட சமயம் நான் பிறந்து விளர்ந்து நடமாடிய மாவிட்டபுர பிரதேசமா இது? என்ற கேள்வி எனது மனதில் எழுந்தது. பிரதான வீதிக்குக் கிழக்கே மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலை வீதியிலிருந்து தெல்லிப்பழை நோக்கி 300 யார் தூரம் வரை வீதியோரம் இருந்த கடைகள், வீடுகள் எவற்றையும் அங்கு காணவில்லை. அது மட்டுமன்றி அதே இடைவெளியில் பிரதான வீதியிலிருந்து கிழக்கே கால் மைல் தொலைவிலுள்ள புகையிரதப் பாதை வரை வீடுகளோ கட்டிடங்களோ தென்படவில்லை. வெட்டவெளியாக இருந்தது. அதேபோன்று பிரதான வீதிக்கு மேற்கே இருந்த வீடுகள், கட்டிடங்கள், மரம், செடிகள் யாவற்றையும் அங்கு காணவில்லை அங்கிருந்து அரை மைல் தொலைவிற்கு வெட்டவெளியாக இருந்தது. இந்த வெட்டவெளிப் பிரதேசத்திற்குள் முட்கம்பிச் சுருள்கள் போடப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தன. இராணுவத்தினர் ஆங்காங்கே கடமையிலிருந்தனர்.

### ஆலயமடம் தரைமட்டம்

தொடர்ந்து முன்னேறிச் சென்றபோது மாவிட்டபுரம் ஆலய தென்மேற்கு மூலையில் இருந்த மடமொன்று தரைமட்டமாகியிருந்தது. சந்தியில் இருந்த கடைகள் யாவும் கதவுகள் உடைக்கப்பட்டுத் திறந்த நிலையிலும், தகரங்களால் மூடியும் கிடந்தன. மாவை ஆலய கோபுரம் எவ்வளவு துன்பம் வந்தாலும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற வகையில் தலை நிமிர்ந்து நின்றது. சந்திப் பகுதியில் பல கட்டிடங்கள் இடிந்த நிலையில் காணப்பட்டன ஆலயப் பகுதியிலும் சேதங்கள் காணப்பட்டன. எந்நேரமும் ஆரவாரமாக இருக்கும் மாவிட்டபுரம் பிரதேசம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது.

மாவிட்டபுரம் சந்தியைத் தாண்டி சீமெந்து ஆலைப்பக்கமாகப் பிரதான வீதியூடாகச் சென்றுகொண்டிருந்தேன். அப்போது மனதில் ஓர் தெம்பு பிறந்தது. அங்கு இடிந்த கட்டிடங்களையோ, உடைந்த மதில்களையோ காண முடியவில்லை. வீடுகள் யாவும் அப்படியே இருந்தன.

எனது வீட்டிற்குச் சமீபமாகச் சென்றபோது அதற்கு அருகிலுள்ள இன்னொரு வீட்டில் இராணுவத்தினர் தங்கியிருப்பது தெரிந்தது. அவர்களை அணுகி, "வீடு பார்க்க வந்தேன்" என்றேன். அவர்கள் "போய்ப் பார்க்கலாம்" என்றனர். வீட்டை அடைந்தேன். அங்கு பூட்டியிருந்த சகல கதவுகளும் திறந்தபடி இருந்தன. உடைமைகள்யாவும் பல இடங்களிலும் சிதறியிருந்தன. 6அடி உயர மதில்கள் 3 அடி உயரத்தில் காட்சியளித்தன. பல முக்கிய பொருள்கள் அங்கு இருக்கவில்லை. அகப்பட்ட பொருட்களுடன் திரும்பி வந்தேன்.

இராணுவத்தினர் அப்பகுதி எங்கும் மிகவும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தனர் சைக்கிள்களிலும், வாகனங்களிலும் அடிக்கடி ரோந்துசென்று கொண்டிருந்தனர்.

தாம் காணும் பொதுமக்களுடன் அளவளாவுவதற்கு மிகவும் முயற்சித்தனர். சிங்களம் தெரியுமா? என வினவியபடி இருந்தனர். சிங்களம் தெரிந்த சிலர் அவர்களுடன் கதைத்தனர். மக்களுக்கு இடைஞ்சல் ஏதுமின்றி நடந்துகொண்டனர்.

குறிப்பிட்ட சில வீடுகளை இராணுவத்தினர் தமது அலுவலகமாகப் பாவித்து வருகின்றதை அவதானிக்க முடிந்தது. மாவிட்டபுரம் பிரதான வீதியில் மாவை ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவில் ஓர் அலுவலகம் இருந்தது. அங்கு சென்று எமதுவீட்டுப் பொருட்கள் சிலவற்றைக் காணவில்லை என்று முறையிட்டபோது, விசாரணைசெய்து எடுத்துத் தருவதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

வீட்டிலிருந்து திரும்பவும் அடையாள அட்டை பரிசீலனை செய்யும் இடத்தையடைந்து அங்கு பரிசோதனை முடிந்ததும் தெல்லிப்பழை நோக்கி முன்னேறினேன். அச்சமயம் அப்பகுதிக்குச் சென்று வந்த பொதுமக்களைச் சந்தித்த போது மாவிட்டபுரம் சுற்றாடல் பகுதியில் 30க்கு மேற்பட்ட வீடுகள் கடைகள் தரைமட்டமாகியிருக்கலாமெனவும், 20 வீடுகள்வரை அரைகுறையாக சேதமடைந்திருக்கலாமெனவும் தெரியவந்தது. வீடுகளை இழந்தவர்கள் சோகந்தமேஉருவாக வந்துகொண்டிருனர். உடைமைகளைஇழந்தவர்களும் அகப்பட்டது மிச்சம் என்ற மனநிலையில் கவலையுடன் காணப்பட்டனர்.

# மாஸ்கோவில் இந்தியவிழா

## லெனின் ஸ்ரேடியத்தில் 'குட்டி இந்தியா'

இந்திய-சோவியத் நட்புறவைப் பிரதிபலிக்கும் 'இந்திய விழா' நேற்று சோவியத் தலைநகர் மாஸ்கோவில் வெகு விமர்சையாக ஆரம்பமானது. இவ்விழாவை இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி ஆரம்பித்து வைத்தார்.

ஒருவருடம் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கென மாஸ்கோ நகர தலைவர் பல ஏற்பாடுகளை செய்துள்ளார். இவ்ஏற்பாடுகளில் சோவியத்தின் பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் மக்களும் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

மாஸ்கோவின் மிகப் பெரிய கலாசார மற்றும் விளையாட்டுக் கூடங்களும், மிகப் பெரிய விருந்தினர் விடுதிகளும், கச்சேரி மண்டபங்களும், விழாவில் பங்கேற்கும் லட்சக்கணக்கான விருந்தினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மாஸ்கோவில் 5000 விளையாட்டுக் கூடங்களும், 26 திரையரங்குகளும், 65 மியூசியங்களும், நூற்றுக்கணக்கான கலாசார மண்டபங்களும் இந்திய விழாவுக்காக தம்மை தயார் நிலையில் வைத்துள்ளன.

நேற்று ஆரம்பமான இவ்விழா மாஸ்கோ நகரெங்கும் நடைபெறவுள்ளது. 'கிரெம்ளின்' மாளிகை உட்பட பல முக்கிய இடங்களிலும் இந்திய மாநில கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இதற்கென கலை குழுக்கள் பல தமது திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் மொஸ்கோ சென்றுள்ளன.

நேற்று லெனின் ஸ்ரேடியத்தின் 8 அரங்குகளில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இதையடுத்துள்ள பகுதியில் விழாவுக்காக 15 அரங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன. லெனின் ஸ்ரேடியத்தை சுற்றி பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒருநகரம் ஒரு குட்டி இந்தியாவாகவே விளங்குகிறது.

இன்று மாலையும் நாளையும் நாளை மறுதினமும் மாஸ்கோ நகர வீதிகளில் விழா நிகழ்ச்சிகள் நடைபெறும். மாஸ்கோவின் மிகப் பெரிய 'லெனின்' வீதியில் இதற்கென 3 அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 'மஸ்க்வா' நதியில் நடைபெறும் கலை விழாவுக்காக 26 கப்பல்கள் தயார் நிலையிலுள்ளன. எல்லாக் கப்பல்களும் இந்திய பாணியில் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இந்திய மக்களின் வாழ்க்கை பற்றி சோவியத் மக்கள் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளும்நோக்கில்மாஸ்கோ நகர மேயர் இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார். சுமார் 80 கடைகளில் இந்திய பண்டங்களும் பரிசுப் பொருள்களும் விற்கப்படும்.

இந்திய உணவு வகைகளை சோவியத் மக்கள் உண்டு களிக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 'டெல்லி' எனப்படும் ஓட்டலில் சுவையான இந்திய உணவு வகைகள் கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன முதலாவது இந்திய-சோவியத் கூட்டு நிறுவனமான இந்த ஹோட்டல் மாஸ்கோவின் மையப் பகுதியில் சிறந்த முறையில் இந்திய பண்பாட்டில் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தொன்மையான மாநிலங்களின் கலைப் படைப்புக்களையும் பிரதிபலிக்கும் வகையில் 19 கண்காட்சிகளையும் இவ்விழா உள்ளடக்கியுள்ளது. இந்திய மக்களின் சகல கலைப் படைப்புகளும் அடங்கிய இக் கண்காட்சி 25 மாநிலங்களைச் சேர்ந்த படைப்பாளிகளின் கண்காட்சியாகும்.

மொத்தத்தில் சோவியத் தலைநகர் மாஸ்கோ குறிப்பிட்ட சிலமாதங்களுக்கு இந்திய மயமாக்கப்பட்டுள்ளது. சோவியத்தில் நடைபெறும் இந்திய விழா இரு நாட்டு மக்களைப் பிணைக்கும் ஒரு மாபெரும் சக்தியாகவே விளங்குமென்றும் இவ்விரு நாட்டைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தொகுப்பு: சிவகணேசன்.

### இராணுவத்தினர் முகாம்

(நெல்லியடி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மையில்கொடிக்காடு என்னுமிடத்தில் உள்ள மாதிரிக்கிராமப் பகுதியில் இராணுவத்தினர் கடந்த சில நாட்களாக முகாமிட்டுள்ளனர்.

### மின் ஊழியர் தாக்கப்பட்டனர்

(பலாலி)

சட்டவிரோத மின் பாவனையாளர்களின் மின்னிணைப்புகளை அகற்றச்சென்ற மின் ஊழியர்களும் மின் பாவனையாளர்களும் பொதுமக்கள் சிலரால் தாக்கப்பட்டனர். இச்சம்பவம் மல்லாகத்தில் இடம்பெற்றது. இச்சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது:

மல்லாகம் கோட்டைக்காடு பகுதியில் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்து வந்ததையடுத்து இந்த இணைப்புகளை அகற்றச் சென்ற அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மற்றும் சில மின் பாவனையாளர்களும் சிலரால் சுற்றி வளைக்கப்பட்ட பின்னர் இருதரப்பினருக்குமிடையில் பலத்தவாக்குவாதம் இடம்பெற்றதாம். பின்னர் அறுக்கப்பட்ட வயர்களும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அகற்ற வந்தவர்களையும் இவர்கள் தாக்கினர்.

### மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்றசவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து ஒன்பது தினங்கள் உற்சவம் நடைபெற்று 10ம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் 11ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### தான்தோன்றி ஈஸ்வரர் திருவிழா

[முல்லைத்தீவு நிருபர்]

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத் திருவிழா கடந்த மாதம் 25ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து நடைபெறும் விழா எதிர்வரும் 10ம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் முடிவடைகின்றது.

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய தேவஸ்தானம் தெட்சணமூர்த்தி நவக்கிரகங்களுக்கான மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் எதிர்வரும் 8ம் திகதி ஆரம்பமாகின்றன.

### யாருடையது

அரியாலையைச் சேர்ந்த திரு. எஸ். ஜெயானந்தகுமார் என்பவர் சுன்னாகம் இலங்கைவங்கி முன்பாக ஒரு திறப்புக்கோர்வையைக் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில்வந்து பெற்றுக் கொள்ளவும்.

### சங்கக்கடை உடைத்து திருட்டு

[நெல்லியடி]

கரவெட்டி சம்பந்தர்கடைப் பகுதிக் கூட்டுறவுச்சங்கக்கடை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு மா மூடைகள் சீனி மூடைகள் திருடப்பட்டுள்ளன.

### கிணற்றில்விழுந்து மரணம்

(பலாலி)

மதுபோதையில் கிணற்றுக் கட்டிலில்படுத்திருந்தவர் தவறுதலாக கிணற்றில் விழுந்து அண்மையில் மரணமானார்.

ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த பொன்னையா சிவநேசன் [27-வயது] என்ற நபரே இவ்வாறு மரணமானவராவார்.

### வீடுகள் சேதம்

(பலாலி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குப்பிளான் பகுதியில் அடுத்தடுத்து விழுந்ததினால் பல வீடுகள்சேதமடைந்ததுடன் பலகால்நடைகள் அதே இடத்தில் மண்டன. கடந்த வியாழன் நள்ளிரவு இத்தாக்குதல் இடம்பெற்றது.

"க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு——

# மாணவர் தயார் செய்யும் வகையில் பரீட்சையை பின்போடவேண்டும்"

(உடுவில் நிருபர்)

எதிர்வரும் க. பொ. த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சைக்கு தம்மைத்தயார்படுத்துவதற்கு போதியளவு கால அவகாசம் கொடுக்கும் வகையில் பரீட்சையை ஒத்திவைக்க வேண்டும் எனக்கோரும் தீர்மானம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்துக்கல்லூரி அதிபர் எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

* பாடசாலைகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் உடனடியாக பாடசாலைகளை விட்டு வெளியேற வேண்டும்.

* அகதி முகாம்களாக பாவிக்கப்படும் பாடசாலைகளில் மாணவர் கல்வி பயில்வதற்கேற்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்

* பாடசாலைகளில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்.

* கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

* பாடசாலை அதிபருக்கு தெரியாமல் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

* பாடசாலைகளில் நடைபெறும் பொதுப்பரீட்சைகள் பாதிக்கப்படாத வகையில் விடுதலை அமைப்புக்கள் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# மொழிஉணர்வும் இனஉணர்வும் கொண்ட பாவேந்தர் பாடல்கள்

கனகசபாபதி நாகேஸ்வரன்

பாரதி வழிவந்த கவிஞர்களாக பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை என்போரைக் குறிப்பிடலாம்

"பொன்னுட்டை மீட்கப்
போக்கும்
பெருநாட்கள்
ஒவ்வொன்றும் திருநாள்
ஆகும்"

எனப் பாடிய இருபதாம் நூற்றுண்டில் தமிழ்க்கவிதை விடிவெள்ளியெனத் திகழ்ந்த பாவேந்தர் பாரதிதாசன் தமிழ்மொழி மீது கொண்ட பற்றினுல் தமிழையே தனது கவிதைப் பொருளாகக் கொண்டு புரட்சிப் பொறி பறக்கப் பாடியுள்ளார். 'தமிழ்நாடு' என்ற இனவுணர்வு பாரதிதாசனது பாடல்களில் வந்து வெளிப்படுத்தப்படும்போது அவை மொழியுணர்ச்சியினையும், இனவுணர்ச்சியினையும் தட்டியெழுப்புவனவாய் அமைகின்றன.

"தன் நாட்டைத் தான்
பெருன் உலகில்
எந்நாட்டான் ஆயினும்
இழிந்தவன்"

என்று பாடிய பாவேந்தர்,

"தமிழுக்கு அமுதென்று
பேர் இந்தத்
தமிழெங்கள் உயிருக்குநேர்"

என்கிறுர்.

தமிழுணர்வு கட்டுமீறிப் போகவே,

'தமிழாய்ந்த தமிழன் தமிழ்
நாட்டின் முதலமைச்சராய்
வருதல் வேண்டும்'

என்றும் பாடினுர் பாரதிதாசனுர்.

தமிழ்நாடும் திராவிடமும் என்ற கொள்கை பாரதிதாசனுலே பற்றுக் கொண்டபோது 'ஏகபாரதம்' என்ற பாரதியின் கொள்கை சிதறுண்டு போகிறது. இப்பண்பு பாரதி, பாரதிதாசனுக்கிடையே காணப்படும் வேறுபாடாகும். பாரதியார் வாழ்ந்த காலத்திற்கும் பாரதிதாசன் வாழ்ந்த காலத்திற்குமிடையே பல வேறுபாடுகள் தோன்றிவிட்டன பாரதி காலத்தில் 'வந்தே மாதரம்', எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற குரல்கள்மேலோங்கி ஒலித்தன; பாரதி காலத்திலோ சமபந்திபோசன மறுப்பு வர்ணுச்சிரம தர்மத்தை அமுலாக்குவது பற்றிய பேச்சு அம்பேத்காரின் தோற்றம் போன்றவை நிகழ்ந்தன இவற்றினுல் ஈர்க்கப்பட்டவர் பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாடு என்ற எல்லைக் கோட்டுக்குள்ளே கட்டுப்பட்ட பாரதிதாசனுக்குக் கருத்துக் கோட்பாட்டுப்பற்றுதல் மிகுதியாக இருந்தமையால் அவரால் உணர்ச்சி வெறியுடன் பாடமுடிந்தது. வேகமும் விறுவிறுப்புமே அவரது பாடல்களின் உயிர் என்று இலக்கிய விமர்சகர்கள் கூறுவர். "ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாக கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன்" என்பார் வ ரா. "பாரதிதாசனின் தமிழ்பற்றுக்கு எல்லையில்லை. அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனுகிவிடுவான்" என்பர் கலாநிதி அ. சிதம்பரநாதன் செட்டியார். 'தமிழ் என் அறிவினில் உறைதல் கண்டீர்' என்று தாமே பாடி தமது கூற்றுக்களினைத் தமது மொழிப்பற்றுர்வத்தினுல் நிரூபணம் செய்கின்றுர் பாரதிதாசனுர்.

இலட்சிய வேகத்தோடு கற்பனை வளமும் மிகுந்தவர் பாரதிதாசன் "வெறி கொண்ட மன எழுச்சியைச் சித்தரிப்பதிலும், வார்த்தைகளைக் கொட்டும் ஆவேசத்திலும், வாழ்க்கையைச்சேர்ந்த பல அம்சங்களையும் இலட்சியங்களையும் கவிதைப் பொருளாக அமைப்பதிலும், கருத்து வன்மையிலும் பாரதிதாசன் தலை சிறந்து விளங்குகிறுர்" என்று ஏ. வி. சுப்பிரமணிய ஐயரால் விமர்சிக்கப்பட்டவர் பாரதிதாசன்.

'பாரதி' என்ற கதிரவனை மறைந்து நின்ற காமேகங்களை இனங்கண்டு கொண்டவர் பாரதிதாசன், தீர்க்கதரிசனத்தாலும், தர்மாவேசத்தாலும் ஆழ்ந்தகன்ற நோக்காலும், ஓங்கி நின்ற பாரதியிலிருந்து ஒரோவிடத்து பாரதிதாசன் மாறுபடுவதற்கு இயக்க வேகத்திலே அவர் தன்னை பறி கொடுத்துவிடுவதும் ஒரு காரணமாகும் என்பர் பேராசிரியர் சி. தில்லைநாதன். தேசிய ஆவேசம், இயற்கையில் இரசிப்பு இலக்கிய வேகம் பாட்டாளிவிடுதலை, என்பவற்றிலே ஈடுபாடு கொண்டு பாப்புனைந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

'வலியோர் சிலர் எளியோர்
தமை
வதையே புரிகுவதா?
மகாராசர்கள் உலசாளுதல்
நிலையாம் எனும் நினைவா'

என்றும்,

'மனிதர் உணவை மனிதர்
பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ
மனிதர் நோக மனிதர்
பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ'

எனவும் பாடிய பாவேந்தர் பொதுவுடமையிலே பற்றுக் கொண்டவராய் சமத்துவ சமுதாய மலர்ச்சி காணும் நோக்குடன்,

ஓடப்பராயிருக்கும் ஏழை
யப்பர்
உதையப்பராகி விட்டால்
ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர்எல்லாம்
மாறி
ஒப்பப்பராகிடுவர் உண
ரப்பா நீ'

என்று பாடுகிறுர்.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற தொடரால் 'பல்கலைக்கழகம்' என்ற தொடரைக் கற்பித்துக் கொடுத்தவர் பாரதிதாசன்; இல்லாவிடில் சர்வகலாசாலை தான் அது.

சீர்திருத்தம், தமிழியல், பகுத்தறிவியல் என்ற மூன்றினுலும் கவரப்பட்டவர் பாரதிதாசன். அவரது பகுத்தறிவுப் பாதையானது சமத்துவக் கோட்பாட்டினையே வடிநிலையாகக்கொண்டுள்ளது

வாய்ந்த சமத்துவ உச்சியில்
நின்று
மானிடருக்கினிதாக -இங்கு
வாய்ந்த பகுத்தறிவாம்
விழியாலே
வான்திசை எங்கணும் நீ
பார்' என்பது நம்மனைவருக்கும் பாரதிதாசன் இடும் கட்டளை. சமூக நோக்கோடு தமிழ்நோக்கை இணைப்பதுவே பாரதிதாசனின் கவிதையிற் கோட்பாடு.

1908இல் கவியாக்கத் தொடங்கிய பாரதிதாசன் 1930இல் சஞ்சீவி பர்வதத்தின் சாரல், கதர்ப்பாட்டு, மூடத் திருமணம, புரட்சிக்கவி என்பன பாடினுர். 1942இல் குடும்பவிளக்குப் பாடினுர். 1945இல் தமிழியக்கம், 1947இல் பாண்டியன் பரிசு, 1959இல் குறிஞ்சித்திரட்டு, 1962இல் மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் என்பவற்றையும் பாடினுர்.

'பெண்ணடிமை தீருமட்டும்
பேசும் திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்து
விடுதல் முயற்கொம்பே'

எனப் பெண் விடுதலை நோக்கிலே பாடும் பாவேந்தர்

[8-ம் பக்கம் பார்க்க]

## காணி விவகாரம்

"காணியின் விலையென்ன" என்று பாகோன் வினவினன்.

"எங்கள் விலை என்றும் ஒன்றுதான், நாளுக்கு ஆயிரம் றூபிள்" என்றுர் தலைவர்.

பாகோனுக்கு விளங்கவில்லை "நாளுக்கு? என்ன அளவு அது? எத்தனை ஏக்கர்?"

"அளக்க எங்களுக்குத் தெரியாது. நாள்கணக்கின்படி விற்கின்றேம் ஒரு நாளில் நடந்து சுற்றக்கூடிய நிலத்தின விலை 1000 றூபிள்" என்று விளக்கினுர் தலைவர்.

பேராசை பிடித்த பாகோன் ஒரு நாளில் ஏராளமான காணியைக் கைப்பற்றியசமயம்நிலத்தில் விழுந்து இரத்தம் பாய சடுதியாக இறந்து விட்டான்!

இறந்த இடத்திலேயே அவனை அடக்கம் செய்தார்கள். கிடங்கு வெட்டியபோது தலையிலிருந்து கால் வரைக்கும் அவனுக்குத்தேவையான நிலம் ஆறடி!

சோவியக் நாட்டுப்பெரும் புலவன் பிரபு டால்ஸ்டாய் எழுதிய கதை இது. எளிய வாழ்க்கை நடத்திய எழிலோன டால்ஸ்டாய் உழவர் குடிசைக்குப் பக்கத்தில்தான் தினசரி உலாவச் செல்வது. காலையிலும் மாலையிலும் வயலில் வேலை செய்யும் உழவர் மத்தியில் இருப்பார்!

சிக்கனமாக வாழ்ந்த இப்பெரியார் ஒருவனுக்குத் தேவைப்படும்காணி எவ்வளவு? என்ற சிறுகதை எழுதி பெரும் சிந்தனைப் புரட்சி ஏற்படுத்திய மாவீரன்!

# சுக வாழ்வுக்குச் சிரிப்பு அவசியம்

சிரிக்கத் தெரியவேண்டும்! ஏனென்றுல், நாம் மனிதர்! சிரிப்புத்தான், உள்ளபடியே, சிறந்த மாமருந்து. நவீன மருத்துவர்களும் மனுேதத்துவ அறிஞர்களும், சிரி சுகத்தோடு வாழ்வாய்!' - என்னும் முடிவுக்குத்தான் வந்திருக்கிறுர்கள். சிரிக்க முடியாமல் எந்த மனிதராலும் இருக்க முடியாது. உடற்கோளாறுலும், உள்ளக் கோளாறுலும் மனிதன் சிரிக்காமல் இருக்கலாம். திறமை குறைந்து, மதிப்புக் குறைந்து போகும் என்பதற்காகவும் சிலர் சிரிக்காமலிருக்கலாம்.

இன்றைய மருத்துவர்கள் சிரிக்காத மனிதனை உடனே 'நோயாளி' எனக் கூறி விடுவார்கள். அது மட்டுமல்ல, சிரிக்காதவன் 'சமுதாயத்தில் பழகத் தெரியாதவன்' என்ற பெயரையும் பூணத்தகுதியுடையவன் ஆகிருன்.

சிரிக்கும்போது தசைநார்கள் விரிவடைகின்றன. மார்பும் வயிறும் நல்ல நிலையடைகின்றன. மார்பு விரிவடையச் சிர்க்கும்போது, ஏராளமான காற்று உட்செல்லுகிறது. உள்ளிருக்கும் உறுப்புக்களிலும் நல்ல மாற்றம் ஏற்படுகிறது அதோடு உட்சென்ற பிராண வாயு அதிக அளவு இரத்தத்தைச் சுத்தம் செய்ய உடல் முழுதும் நல்ல இரத்தம் பாய வழி ஏற்படுகிறது. எனவேதான் விடாது சிரிப்பவர்கள், வெடிச்சிரிப்புக்காரர்களின் உடல்நிலை நன்ருக இருக்கின்றது. இதை வைத்துத் தான்ஒரு பேரறிஞர் கூறினுர். "நாள் தோறும் கொஞ்ச நேரம் சிரிப்பது எனப் பழக்கப் படுத்திக் கொள்வது தவறல்ல. அது ஒரு சுவையான உணவு உண்ணும் பழக்கம் என்று கூடக்கூறலாம்!"

> மருத்துவர்கள் சிரிக்காத மனிதனை நோயாளி எனக் கூறி விடுவார்கள். சிரிக்காதவன் "சமுதாயத்தில் பழகத் தெரியாதவன்" என்ற பெயரையும் பூணத் தகுதியுடையவன் ஆகிருன்.

வயோதிகம் தாண்டவமாடும் முகம் பெரும்பாலும் சிரிக்கத் தெரியாதவர்களின் முகமே என்பதை மருத்துவ உலகம் கண்டிருக்கிறது. மனிதர், தம் உடலுக்கும் உள்ளத்திற்கும் உறுதி தரும் சிரிப்பை விட கவுரவத்தை நேசிக்கிறுர்கள். அது மட்டுமல்ல; உரக்கச் சிரிப்பது அநாகரிகம் என்ற கருத்தைக் குழந்தைகளுக்குப் போதித்துக் கொண்டும் வருகிருர்கள்.

பழைய பாளையக்காரர்கள் காலத்து நாகரிசமான 'உதட்டுக்குள் சிரிப்பதைத்தான்' இன்னும் பெருமையாகக்கருதுகிருர்கள். இருபதாம் நூற்ருண்டு நாகரிகத்தில் வாழ்பவர்கள்!

சிரிப்பு, மகிழ்ச்சிகரமான பூங்காற்று என்றுல் உரக்கச் சிரிப்பது பொதிகைத் தென்றல் எனலாம் புன்முறுவலோ உள்ளத்திற்குக் குளுமையூட்டும் மலைக்காற்று! இதை நினைவு கொண்டுதான். இரு நூற்ருண்டுகளுக்கு முன் ஜோஸப் எடிசன், "மிருகத்திற்கும் மனிதனுக்குமுள்ள வேற்றுமை சிரிப்புத்தான்!" என்றுர்.

மனக்கவலையின் ஒரே ஒரு பெரும்வைரி சிரிபபுத்தான். ஆனுல் நல்லவேளையாக, யாருக்கு அதிக கவலை சூழ்கிறதோ, அவர்கள் தங்களையுமறியாமலேயே அதிகமாகச் சிரிக்கும் திறனைப் பெறுகிருர்கள்.

மக்கள் 'மனம் நலம்' பெறுவதற்காக நிறுவப்பட்ட பிரிட்டிஷ் தேசியக்கழகம் வெளியிட்டுள்ள ஒரு சிறு ஏட்டில் சிரிப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

"கவலையின் எதிரி சிரிப்பு என்றுலும் சிலர் சிரிப்பதில்லை! சிரிக்க முடிவதுமில்லை! எப்போதும் 'உம்' மென்று இருக்க விரும்புகிருர்கள். தங்களைப் பார்த்துத் தாங்களே சிரித்திட அஞ்சுகிருர்கள் அல்லது தங்களை முட்டாள் என்றே, தவறு செய்பவன் என்றே ஏற்றுக்கொள்ளாத பண்பு படைத்தவராய் இருக்க வேண்டும்! துன்பத்தை எதிர்க்க உதவும் கருவி சிரிப்புத்தான். அளவுக்கு மீறிய துன்பமடைந்து மனக்கோளாறு ஏற்பட்ட மனிதர், பெரும்பாலும் சிரிக்கத் தெரியாதவர்களே!"

பெரும்புகழுற்ற டாக்டர் ஒருவர், எல்லோராலும் கைவிடப்பட்ட 'மனநோய் பிடித்தவனைக்' கண்டு, அவன் நோய் தீர்க்கப்பட மார்க்கம் உண்டெனக் கூறினுராம்! "எந்த அடிப்படையில் நீர் கூறுகிறீர்?" எனக் கேட்டதற்கு அவர் அளித்த பதிலுரை விசித்திரமாயிருந்தது! "அந்த நோயாளி இன்னும் கொஞ்சம் கொஞ்சம சிரித்துக்கொண்டிருக்கிறுன் எனவே, அவன் நோய்தீர வாய்ப்பிருக்கிறது!" என்றுராம்.

வயதானவர்கள் சிரிப்பை அடக்கி வைத்துக் கொள்வார்கள். ஆனுல், சிறுவர்கள் சிரிப்பு வந்தால் சிரித்தே தீருவார்கள். எனவே சிறுவர்கள்.

[8ம் பக்கம் பார்க்க]

# கலியுகம் முதலாம்திகதி

மகாபாரத யுத்தத்துக்குப் பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குப் போய்விட்டார். தருமபுத்திரரும் தம்பிமாரும் திரௌபதியுடன் அத்திணபுரத்திலே அரசு புரிந்து கொண்டிருக்கிறார்கள்.



ஒருநாள் குடியானவர்கள் இருவர் ஒரு வழக்குக் கொண்டுவந்தார்கள். யுவராஜா வீமர். அவரிடம் வழக்குக் கூறப்பட்டது. அந்த வழக்கு இது.

ஒருவர் நிலத்தை விற்றார். மற்றவர் அதனை விலை கொடுத்து வாங்கினார். வாங்கினவர் அந்நிலத்தில் ஒரு வீடுகட்டுவதற்காக அத்திபாரமிடுவதற்கு நிலத்தை வெட்டுவித்தபோது ஒரு புதையல் வந்தது உடனே அவர் விற்றவரை அழைத்து வந்து

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

''ஐயா இந்தப் புதையலை ஏற்றுக்கொள்ளும். நான் உம்மிடம் நிலத்தை வாங்கினேனே தவிர அதனுள்ளிருந்த புதையலை விலை கொடுத்து வாங்கவில்லையே'' என்றார்.

விற்றவர் ''நான் இந்தப் புதையலைஅறியேன் எனக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதைத் தவிர்த்து உமக்கு நான் நிலத்தை விற்கவில்லையே உமது அதிர்ஷ்டத்தால் இது வந்திருக்கிறது. நான் ஏற்கமுடியாது. ஏற்றால் வந்தவெள்ளம் நின்றவெள்ளத்தையுங் கொண்டு போகிற மாதிரி என்னிடத்திலுள்ள செல்வத்தையும் இது அடித்துக்கொண்டு போய்விடும். அதனாலே எனது சந்ததியும் பாழ்பட்டுப்போம்'' என்று ஒரு குட்டிப்பிரசங்கம் செய்தார். வாங்கினவருக்குக் கோபங்கூட வந்தது. ''அப்படியானல் எனது செல்வமும் போய்விடும். எனது சந்ததியும் பாழ் படலாமா'' என்றார். அப்பால் ஒருவரை ஒருவர் ஏற்கச் சொல்வதே தரும விரோதமென்று அவர்களுக்குப்பட்டது. இந்த தருமசங்கடந்தான் அந்த வழக்கு.

யுவராஜாவிடம் புதையல் ஒப்படைக்கப்பட்டது. ''நாளை அண்ணா இருக்கும் சமயம் வாருங்கள்' என்று உத்தரவிடப்பட்டது.

மறுநாள் தருமரும் தம்பிமாரும் மற்றும் மந்திரச் சுற்றத்தவர்களும் வீற்றிருக்கின்றார்கள். அக்குடியானவர்கள் இருவரும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னமே வந்துவிட்டார்கள். யுவராஜா அவர்களுடைய வழக்கை இரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார். தருமர் அன்றலர்ந்த தாமரையோல் முகம் மலர்ந்து மகிழ்ச்சியாகி தேஜெழுக அந்த இருவரையும் நோக்குகிறார். அந்த இருவரும் கண்கள் சிவந்து ஒரேகுரலில் தாங்கள் முதனாள் அப்படிச் சொல்லவில்லையென்று மறுத்தார்கள். யுவராஜா மூக்கிலே விரலைவைத்தாரோ அல்லது தலையிலேதான் கையை வைத்தாரோ தெரியவில்லை. ஆள் அசலிகை மாதிரிக் கல்லாய்ப் போனார்.

நிலத்தை வாங்கினவன் சொல்லுகிறான்;

ஐயா,

நான் நிலத்தை விற்றேனே தவிர புதையலை விற்கவில்லை. அது எனது முன்னோர் எனக்கும் எனது சந்ததிக்குமாகப் பாடுபட்டுத் தேடிப்புதைத்த புதையல். அது எனக்கே உரியது. என் சந்ததி அனுபவிக்க வேண்டியது.

முறைப்பாடு முடிந்தது. முதனாள் முறைப்பாடு ஒரு விதம்; அன்றைய முறைப்பாடு அதற்கு நேர் எதிர். தருமரும் அங்கேயுள்ள அனைவரும் ஒருவரையொருவர் நோக்கி ஆச்சரியப்படுகிறார்கள் சிந்தனையில் ஆழுகின்றார்கள்.

ஒரேயொரு ஆள்மாத்திரம் எவ்வித ஆச்சரியமுமின்றிப் புதிய பஞ்சாங்கத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சகாதேவர்.

அவர்தான் சொன்னார்;

அண்ணா,

இன்று கலியுகம் 1ம் திகதி என்று.

கலியின் தோற்றம் இருந்தவாறு!

தொகுப்பு
ஆசிரியமணி
அ பஞ்சாட்சரம்

# மலரினும் மெல்லிது குழந்தை மனம்

குழந்தை மனம் மலரை விட மென்மையானது. அதைக் கசக்கிப் பாழாக்கக்கூடாது. இயல்பாக வளருமாறு விடவேண்டும்.

தன்மான உணர்ச்சியில் குழந்தைகளை யாரும் வெல்லமுடியாது. உலகமே தலைகீழ் ஆனாலும் குழந்தைகள் ஒருவருக்குப் பணிந்து போவதில்லை.

குழந்தை என்ன விரும்புகிறதோ அதைச் செய்தால் போதும். என்ன கேட்கி

டாக்டர்
மு. வரதராசன்

றதோ அதைக் கொடுத்தால் போதும். குழந்தையின் நல்ல ஆசைகள் நிறைவேறும்படி நாம் சிறிது துன்பப்பட்டாவது வளர்ப்பதுதான் நாகரிகம். நம் ஆசைகளைக் குழந்தைகளின் மேல் திணிப்பது அநாகரிகம் மனிதன் செடிகொடிகளை உரிமை கொடுத்து வளர்க்கிறான். ஆனால் குழந்தைகளை அவ்வாறு வளர்க்கக் கற்றுக்கொள்ளவில்லை.

குழந்தைகள் நாம் சொல்லிக்கற்பது குறைவு. நாம் செய்வதைப் பார்த்துக் கற்பதுதான் மிகுதி. அதனால் நாம் நடந்து வழி காட்டவேண்டும்.

குழந்தைகளின் மனத்தில் குறைகள் வேரூன்றிவிட்டால் அவை வளர்ந்த பிறகும் நீங்குவதில்லை.

குழந்தை வளர்ப்பு என்பது சிறந்த அறத்தொண்டு என்று உணரவேண்டும். குழந்தையை அணுகும் போது பொறுமையும் அமைதியும் மனத்தில் நிரப்பிக்கொண்டு செல்ல வேண்டும்.

குழந்தைகளின் வாழ்வில் ஒருமுறை ஒருவழக்கம் ஏற்பட்டால் அதுவே சட்டம் போல் ஆகிறது. பிறகு அதை மாற்றிக்கொண்டு வாழ முடிவதில்லை.

பரபரப்பும் வீணான கடமை நெருக்கடியும் மிகுந்த இன்றைய நாகரிக வாழ்க்கையில் குழந்தைகளைப் பெறுகிறார்கள். குழந்தையின்பத்தைப் பெறுவதில்லை.

குழந்தை வளர்ப்புக்கு முதலில் வேண்டியது பெற்றோர்களின் தோல்விதான். அதில்தான் உண்மையான இன்பம் இருக்கிறது. அப்போதுதான் சிறு கை அளாவிய கூழிலும் மழலைச் சொல்லிலும் அமிழ்தத்தையும் அனுபவிக்க முடியும்.

# ஈழத்துத் தமிழ்க்கவிதை வளமும் வரலாறும்—20

சண்முகம் சிவலிங்கம் ''நாம் இன்னமும் பாரதி யுகத்தில் இருக்கிறோம் என்று சொல்வது தவறு பாரதி பரம்பரையின் இறுதித் தளிர்கள் பழுத்துக் கொண்டிருக்கின்றன. பாரதி ஒரு யுகசந்தி என்பது மெய்யே. ஆனால் அந்த யுகசந்தி பிரிந்துவிட்டது. அதன் ஒரு கிளை பிச்சமூர்த்தி என்றால், அதன் மறுகிளை மஹாகவியே. பாரதி வளர்த்த சில கவிதைப்பண்

## மஹாகவிபற்றிய மதிப்பீடுகள்

புகளின் தோல்வியே பிச்சமூர்த்திஎன்றால் அத்தோல்வி நிகழாமல் அதனை இன்னுமொரு கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி எனலாம்'' என்பர்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை என்று எல்லைப்படுத்தாமல் தமிழ்க் கவிதைப் பெரும் பரப்பு முழுவதன் வரலாற்றோட்டத்தையும் உட்கொண்டு சண்முகம் சிவலிங்கமவர்கள் முன்வைத்துள்ள இம்மதிப்பீடு மஹாகவி தொடர்பாக எதிர்காலத்தில் நிகழவேண்டிய உயர்நிலை ஆய்வுகளுக்குக் 'கரு'வாகத் திகழவல்லது.

மஹாகவி தொடர்பாக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களிலொன்று அவரது சமூக நோக்குநிலை தொடர்பானது.

மஹாகவியைப் பற்றிக் குறிப்பிடும் ஒரு இடத்தில்,

''இவரது கவிதைகள் அமைதியானவை. ஆர்ப்பாட்டமில்லாதவை. கொடுப்புக்குட் சிரிக்கும் ஓர் இலேசான குறும்புடன் இலகுவான சொற்களுடன் நடப்பவை. இந்த அமைதியும் சாந்தமும் கவிஞரது வாழ்க்கை நோக்கிலிருந்து பிறப்பெடுத்தவையே எனலாம். வாழ்க்கையைத் தாம் காணும் வண்ணமே ஏற்றுக்கொண்டு 'இதுதான் உலக இயல்பு; எப்படியோ சமாளிக்க வேண்டியதுதான்' என்றமனப்பான்மை கடந்து செல்ல எண்ணுவதே இந்த நோக்கு அத்துடன் எதிர்ப்படும் உலகியல் இன்பங்களையெல்லாம் ஈடுபட்டுச் சுவைத்துத் திளைக்கும் நாட்டமும் அவரது கவிதைகளிற் புலப்படுகின்றது''

என்கிறார். ஒரு சில விதி செய்வோம்-1972 ப. 5] இவ்விரு விமர்சனங்களும் மஹாகவியின் சமூக நோக்குநிலை தொடர்பானவையே. நித்தியானந்தன் கூறுவது போலப் புதியதொருவீடு நாடகத்திற் சமூகப் பிரக்ஞை இல்லை என்றோ அல்லது முருகையன் அவர்கள் கணித்தது போல

கலாநிதி நா. சுப்பிரமணியன்

''மஹாகவியின் [நாடகம் புதியதொரு வீடு] அடிப்படையில் தோல்வி, சமுதாயப்பிரக்ஞை இல்லாதது''

என மு. நித்தியானந்தன் அவர்கள் அந்நாடகம் தொடர்பாக நிகழ்ந்த கலந்துரையாடலில் மஹாகவிக்கு முன்னாலேயே எடுத்துக்கூறினார் என்பர். நெல்லை. க. பேரன் மல்லிகை ஜூலை 1971 ப 32] இ, முருகையன் அவர்கள் மஹாகவியவர்கள் இதுதான் உலக இயல்பு; எப்படியோ சமாளிக்க வேண்டியதுதான்'' என்ற மனப்பான்மை கொண்டவரென்றோ முடிந்த முடிபாகக் கூறுதற்கில்லை.

மஹாகவி அவர்கள் ஒரு கலைஞன் என்ற வகையிலே சிறுமை கண்டு பொங்கியவர்; சமூகக் குறைபாடுகளுக்கெதிராகக் குரல் கொடுத்தவர்; கொடுமைகளுக்குப் பணியாத,

[8-ம் பக்கம் பார்க்க]

# கார்ட்டூன் ஓவிய உலகில் நான்

(19)

அது ஹிட்லர் உலகைக் கலக்கிய காலம் நான் எனது கரவெட்டி வீட்டில் ஒருநாள் குளித்துக்கொண்டு நினறேன். அப்பொழுது வானத்திலிருந்து வந்த பேரிரைச்சல் என் காதை தொளைத்தது நிமிர்ந்து பார்த்தேன் ஒரு விமானம் பறந்து கொண்டிருந்தது. அன்றுதான் நான் முதன் முதலாக ஆகாய விமானத்தைப் பார்த்தேன். சமையலறையில் இருந்த எனது தாயாரையும் கூப்பிட்டு விமானத்தைக் காட்டினேன். எனது தாயாரும் மனிதன் விண்ணில் பறக்கும் சாகஸத்தைக் கண்டு வியந்து நின்றார்.

அன்று முதல் முதலாகவிமானத்தைப் பார்த்து விஞ்ஞானத்தின் உயர்வைக்கண்டு வியந்து நின்ற நான் இன்று பொம்மர் விமானத்தைக் கண்டு பதுங்குகுழியில் வியர்த்து இருக்கின்றேன். நாகரிகம் வளர வளர உலகம் கோலாகலமாவதை விடுத்து அலங்கோலமாக மாறுகிறதே என நினைத்துக் கண்ணீர் விட்டேன். ஆனல் கண்ணீர் தான் கலைக்கும், காவியங்களுக்கும் கருவூலமென நினைக்கிறேன்.

### கண்ணீரில் கருத்தரித்த படைப்பு

கண்ணீரில் கருத்தரித்த கலைப்படைப்புகள் தான் மக்களைக்காட்டுமிராண்டிகளாக்காமல் ஓர் அளவு பண்புள்ளவர்களாக உலகில் வைத்திருக்கின்றது. உலகின் பெரும் காவியங்களெல்லாம் கண்ணீரில் நீந்தியவர்களால் தான் படைக்கப்பட்டவை என நான் சிந்திப்பது உண்டு.

நான் காவிய கர்த்தாவல்ல. ஒரு கருத்து ஓவியன். நான் வடித்த ஓவியங்கள் கூடுதலாகக் கவலையைத்தான் கருவாகக் கொண்டவை. கார்ட்டூன் ஒன்று இங்கே ஞாபகத்துக்கு வருகின்றது.

சிரித்திரன் சிவஞானசுந்தரம்

### காத்ததற்குப் பரிசு

ஒருவர் கடலில் உயிருக்குப் போராடுகின்றார், ஜீவகாருண்யப் பேர்வழி ஒருவர் கடலில் பாய்ந்து அவரைக் காப்பாற்றுகின்றார். காப்பாற்றப்பட்டவரோ காப்பாற்றியவருக்கு அடி, உதை, ஏச்சு எல்லாம் தாராளமாக வழங்குகின்றார். உயிர்ப்பிச்சை அளித்த ஜீவகாருண்யப் பேர்வழியோ ''உன் உயிரைக் காப்பாற்றிய எனக்கு உதையா?பரிசு'' எனக் கேட்கின்றார். அதற்கு அவர் ''நான் உத்தியோகமில்லாத கவலையில்கடலில் குதித்தேன். உன்னால் உத்தியோகம் தர முடியுமா?'' எனக் கேட்கின்றார். உயிர்ப்பிச்சை கொடுத்தவரோ திருதிருவென விழித்து அசடுவழிய நிற்கின்றார்.

### கலைப்பேரரசு பாராட்டு

மனிதனின் கவலைகளை மட்டும் நான் வரையவில்லை மிருகங்கள், பட்சிகள் மேலுள்ள ஜீவகாருண்யத்தினாலும்கார்ட்டூன்கள் வரைந்திருக்கின்றேன். ஒரு மறி ஆடு கடாவைப்பார்த்து ''அன்பே எனது காதலுக்கு என்ன பதில்? எனக் கேட்கின்றது. அதற்குக் கடா ''நான் தீபாவளிக்குப் பிறகு பதில் கூறுகின்றேன்'' எனச்சொல்கிறது. இந்தக் கார்ட்டூன் ஆரம்பகாலச் சிரித்திரனில் வெளியானது. இருதயத்தை நெகிழச் செய்த கார்ட்டூன் இது எனக் கலைப்பேரரசு ஏ ரி. பொன்னுத்துரை அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

### இரண்டு தினங்கள்

மற்றுமொரு கார்ட்டூனில் தாய்க்கோழி கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறது அதன் குஞ்சு அதனைப் பார்த்து ''ஏனம்மா கண்ணீர் வடிக்கின்கிறாய்?'' எனக் கேட்கிறது அதற்கு தாய்க்கோழி ''இன்று எமது வீட்டு எஜமான் பிறந்த தினம் உனது அப்பா இறந்த தினம்'' எனப் பதில் கூறுகின்றது. மனித நேயம்நீறு பூத்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் ஜீவராசிகளின் ஜீவகாருண்யக் கார்ட்டூன்கள் அர்த்தமற்றவையாகத் தென்படலாம். ஜீவகாருண்ய ஒளிமிக்க புத்தமதம் தோன்றியது ஆடு கோழி வேள்விகளை ஒழிக்க வன்றோ!

(தொடரும்)

## எமது சிறுகதை

# அவள் ஒரு சமுதாய சித்திரம்

தலவாக்கொல்லே சௌந்தரராஜன்

தரகரும் தேவியின் அப்பா மகாசிவமும் முன் ஹோலிலிருந்து கதைப்பதை தேவி குசினியிலிருந்த வண்ணம் கதவிடுக்கினுள் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் அவர்களது பேச்சு இவளுக்கு கேட்கவே இல்லை. தரகர் எதையோ நாசூக்காகக் கூற மகாசிவத்தின் முகம் கடுமையாவதைப் பார்த்த தேவிக்கு 'ஏதோ விபரீதம்' என்று மட்டும் புரிந்தது.

தேவி தேநீரைக் கொண்டு வர இருவரும் பேச்சை நிறுத்திக்கொண்டனர். அப்போதாவது காதில் விழும் ஓரிரண்டு வார்த்தைகளைக் கொண்டு அனுமானிக்கலாம் என்ற தேவியின் கணக்கும் - எதிர்பார்ப்பும் பிழைத்து விட்டது. தந்தையும் - தரகரும் அவளை அப்பாவித்தனமாக நேக்கினர். மீண்டும் அவள் தன்னைக் குசினுக்குள் புகுத்திக்கொண்டாள்.

நீண்டநேர பேச்சின் பின் மகாசிவத்தின்முகத்தில் ஈயாடவில்லை விடைபெற்றுக் கொண்ட தரகரை வாயிற்படி மட்டும் போய் அனுப்பிவிட்டு திரும்பிய மகாசிவத்தின் கண்கள் கலங்கியிருந்தன. சாய்வு நாற்காலியில் 'பொத்' தென்று விழுந்தவர் கண்ணை மூடியபடி ஆழ்ந்தசிந்தனையாகிவிட்டார்.

தேவிக்கு இருப்புக்கொள்ளவில்லை குசினிக்குள் 'குட்டிப் போட்ட பூனையென' நடந்தாள். மனது ஏனோ குமைந்தது. பொறுக்க முடியாத போது அப்பாமுன் ஆஜராகிவிட்டாள் "அப்பா..." என்று அழைத்து விட்டு தலையைத் தாழ்த்திக்கொண்டாள். கண்களைத் திறந்த மகாசிவம் மகளை ஊடுருவிப பார்த்தார் "என்னப்பா.. தரகர் வந்தார்... நீங்க இடிஞ்சுபோனப் போல இருக்கிறீங்க... என்னவாம்?" அவள் கேள்வியாய் கேட்டுவிட்டு தந்தையின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

திடீரென மகாசிவத்தின் விழியோர அணைக்கட்டில் நீர் தேங்கி விட்டது. தலையைத் தாழ்த்திக்கொண்டே "உன்னோட கல்யாணம் நிண்டுபோச்சுது பிள்ளை. நிண்டு போச்சுது" என்று கம்மிய குரலில் விசும்பலுக்கு மத்தியில் கூறிமுடித்தார்.

தேவிக்கு இடிஇறங்கியது போலிருந்தது. மூச்சே நின்றுவிடுவது போன்ற பிரமை. அருகிலிருந்த தூணை இறுகப் பிடித்துக்கொண்டாள். தலை சுற்றியது. "ஏனப்பா... ஏன்...? அவளுக்கு அதற்கு மேல் வார்த்தைகள்வரவில்லை.

"எல்லாம் உந்தப் பாழாய் போன பிரச்சினையாலேயும், சீதனத்தாலேயும் வந்ததுதான். அதுதான் வீட்டையும், நிலத்தையும் சீதனமா தாரதெண்டதற்கு ஒத்துக்கொண்டாரே பிறகென்னவாம்..."

"ஓ! ஒத்துக்கொண்டார்தான் பிள்ளை. ஆனால் இப்போதைக்கு இருக்கிற நிலையில அந்த சீதனத்தால எந்தப் பிரயோசனமும் இல்லையாம்" மகாசிவம் கூறிமுடிக்க தொலைவில் ஏற்பட்ட சத்தம் நிலத்தை அதிரவைத்தது.

கண்களில் நீர்முட்ட தேவி பழைமைக்கே போய்விட்டாள். தேவி மட்டுமேவீட்டில் ஒரேபிள்ளை. அவள் பருவம் அடைந்த அடுத்த மாதமே தாய்மோசம் போய்விட்டாள். அதனால் மகாசிவத்துக்குப் பெருத்த சுமையாகிவிட்டது. எங்கும் போகாது தன்னைச் சுற்றி அவர் ஒரு வட்டத்தை வரைந்துக்கொண்டார். தேவியை குறையின்றி பார்க்க வேண்டுமென்ற நினைப்பில் அமிழ்ந்து போனதால் ஒழுங்காகக்காணியைக்கூடகவனிக்கவில்லை. அதனால் வரும்படி தடைப்பட்டு இருந்த பணமும் செலவில் கரைந்துப் போயிற்று. எது எப்படியோ மகளுக்கென்று கொடுக்க அவரிடம் இருந்தது ஒரு வீடும் ஐந்து ஏக்கர் நிலமும்தான். மகாசிவம் தேவிக்கு வரன் பார்க்க ஆரம்பித்தபோதுதான் ஒரு தரகர் மூலம் சிவராஜாவின் (அதுதான் மாப்பிள்ளையின் பெயர்) அறிமுகம் கிடைத்தது.

எங்கோ ஒரு தூர நகரத்தில் கை நிறைய சம்பளம் பெறும் அரச உத்தியோகஞ் செய்த சிவராஜாவுக்கும் -தேவிக்கும் கல்யாணப் பேச்சு முற்றி, பொருத்தம் பார்த்து சீதனத்தில் வந்து நின்றது. மகாசிவம் காசு பணமாய் எதுவும் தரமுடியாத நிலையைவிளக்கித் தனது மகளுக்காக இருந்த ஒரே ஒரு வீட்டையும் ஐந்து ஏக்கர் நிலத்தையும் தருவதாகக்கூறியபோது சிவராஜா அசற்கு மறுப்பு எதுவும் கூறவில்லை. மகாசிவம்கூட மனதினுள்ளேயே சிவராஜவைப் பெருமிதமாய் நினைத்துக் கொண்டார். அளவுக்கு அதிகமான வரதட்சணை எதுவுமின்றி தான் தருவதையே ஏற்றுக் கொள்ளும் சிவராஜா அவர் மனதில் கோபுரமாய் ஜொலித்தான்.

அதன்பின் சிவராஜா, தேவியின் வீட்டிற்கு மூன்று நான்கு தடவை வந்ததுண்டு. மகாசிவம் இருந்த நேரம் தவிர மற்றைய நேரங்களில் சிவராஜாவுக்கும்-தேவிக்கும் இடையில் பேச்சுக்கள் வளர்ந்து நாளடைவில் அதுவே இறுக்கமாகி தேவியின் மனதில் இனம்புரியாத உணர்வுகள் கிளர்ந்தன. 'தன் எதிர்காலம் அவர் கையில் தான்' என்ற துணிவில் அவளும் சரளமானாள். ஆனால் என்னவோ அவ்வப்போது எழுத்துத்திகதியும் திருமணத் திகதியும் பிரச்னை காரணமாக ஒத்துவராது ஒதுங்கிப் போயின.

நாட்கள் நகர்ந்து மாதங்களாக ஓடி ஒளிந்த பின்தான் அந்தச்சம்பவம் - தன்வாழ்வை சீரழிக்கும் சம்பவம் நடைபெற்றது.

திடீரென ஒருநாள் விடிவு நட்சத்திரத்தில் ஒளியை தேடும்இந்த இளசுகளை தடிக் கருமேகத்திடையே சூரியனைக் காணவிழையும் அந்த'அதர்மங்கள்' அக்கிராமத்தைச்சுற்றி வளைத்தனர். வீடு, வீடாக ஏறி இறங்கி அக்கம் பக்கமெல்லாம் அலசி ஆராய்ந்து வெறுமனே திரும்பியோர் ஊரின் ஒதுக்குப் புறத்தையே தமதாக்கிக்கொண்டனர். அவர்களின் 'அந்தக் களம்' மகாசிவத்தின் காணிக்கும் - வீட்டிற்கும் அரைமைல் தொலைவிலாய் அமைந்துவிட்டது. பாதுகாப்பிற்காக மகாசிவமும் ஊரின் வேறொரு எல்லையிலுள்ள ஒரு வீட்டில் வாடகைக்குக் குடிபுகுந்தார். அதனால் நிலம் பாழாகி வீடு கவனிப்பின்றிக் கிடந்தது.

"என்ன பிள்ளை யோசிக்கிறாய்? பிறகொருக்கால் மாப்பிள்ளையை பார்த்து கேட்டுப் பார்ப்போமே." தேவி சோர்ந்து விடக்கூடாது என்பதற்காய் மகாசிவம் கூறியது மகளுக்கு தெம்பாயிருந்தாலும் மனதில் இனம்புரியாத வேதனை தோன்றியது. பெண்ணாய்ப் பிறந்தாலே இப்படித்தானா? சீதனம் இருந்தும் என்வாழ்வு சீரழியும் நிலைதானா? இந்தப் பிரச்னையும் சீதனமும் என்போன்ற எத்தனைப் பெண்களின் வாழ்வை விழுங்கியதோ தெரியவில்லை' தேவி மனதில் குமுறினாள். ஒருவேளை இந்தசீதனத்தோட என்னைக் கல்யாணம் முடித்துக்கொண்டபின் இப்படியொரு பிரச்னையில் வீட்டையும் நிலத்தையும் இழக்க வேண்டி வந்திருந்தால்...? என்னையும் வேண்டாமென்று கூறியிருப்பாரோ...? அவளுளுக்கு நினைக்கவே கசப்பாயிருந்தது.

ஒரு வாரத்தின் பின் மகாசிவம் மாப்பிள்ளை சிவராஜாவைக் காணப் போனார். போனவர் திரும்பியதும் அதே நிலையில்தான். மாப்பிள்ளையின் மறுமொழியில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. மகாசிவம் கூட ஏதேதோ எடுத்துச் சொன்னார். காலில் விழாத குறைதான். ஆனால் எதுவும் பயனில்லை.

தேவி சமைத்து போனாள். ஆனால் மகாசிவம் மட்டும் அவ்வப்போது "இந்த வரன் இல்லாட்டா வேறொன்று பார்ப்போமே... பின்ன யோசிக்காத பிள்ளை" என்று ஆறுதல் கூறுவார். ஆனால் மனதில் மட்டும் 'சீதனமாய் வேறெதுவம் கொடுத்து தன் மகளை கரைசேர்க்க முடியவில்லையே' என்ற வெம்மை.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன தேவி முனைவிட இளைத்துக் காணப்பட்டாள். அவளுக்குக் கல்யாணம் நின்றுப் போனதோடு சிவராஜாவுடன் பேசிப்பார்த்த நாட்களில் நெஞ்சில் விழுந்த கீறல்கள் ரணகாயங்களாகிக் கொண்டிருந்தது, எதுவும் செய்ய முடியாதபடி ஒடிந்துபோனாள் இனியும் தனக்குஎன்ன ஆகவேண்டி உள்ளது' என்று சாம்பி விட்டாள் இருப்பதைக் காட்டிலும் சாவதே மேலென எண்ணினாள். ஆனால் வெறுமனே சாவதால் யாருக்கு என்ன பிரயோசனம்? தனது சாவு படிப்பினையாக இருக்க வேண்டுமென நினைத்தாள்.

அவள் ஏதோ முடிவிற்கு வந்துவிட்டாள். இந்தச் சமுதாய சாரலிலே சீதனமில்லாமல் அல்லது இந்தப் பிரச்னை ஓயாமல் தன் வாழ்வு மலராது. இந்தப் புனித பயணத்தின் வெற்றியில்தான் இன்னும் பலரின் வாழ்வே மலரவுள்ளது என்பதையெல்லாம் அவள் தெளிவாகப் புரிந்து கொண்டபோது......... தன் முடிவில் தீர்க்கமானாள்.

ஒருநாள் தந்தை இல்லாத நேரம் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள். வீட்டிற்கு வந்த மகாசிவத்திற்குப் பேரிடியாக இருந்தது. அவளைத் தேடாத இடமேயில்லை. எங்கெங்கு தேடியும் மகளை காணாது ஒடிந்து போய்விட்டார். 'வாழ்வு வெறுத்த அவள் எங்காவது தொலைதூரத்தில் தற்கொலை செய்து கொண்டிருப்பாளென அவர் முடிவெடுத்த போதுதான் அந்தக் கடிதம் வந்தது மகாசிவம் அவசரம் அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தார்.

"அன்புள்ள அப்பா!

நலமுடன் இருக்கிறேன் சீதனத்தால் தாலி போட்டுக் கொண்டு அதையே விலங்காக்கிக் கொள்வதை விரும்பாது நான் இப்போது நிரந்தர 'சுதந்திர' காற்றைத்தேடி பயணம் செய்பவளாகி விட்டேன். எனக்காக வருத்தப்படாதீர்கள். சீதனத்துக்காகவே வாழ்பவர்களுக்காகக் கவலைப்படுங்கள். இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் 'இந்தப் பேயிடமிருந்து பாதிக்கப் பட்டவர்களுக்



காவதுவிமோசனம் கிடைக்கப் பிரார்த்தியுங்கள்.

அன்புடன்
மகா
தேவி"

என எழுதப்பட்டிருந்தது. தன் மகள உயிரோடுதான் இருக்கிறாள் என ஆனந்தப்பட்டாலும், அவளது முடிவை ஏனோ அவரால் ஜீரணிக்க முடியவில்லை. இனி அவளை எந்தத் திசையில் தேடுவது...? அவர் மீளவும் அமைதியின்மைக்குப் போய்விட்டார்.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை, மகாசிவம் வீட்டிலிருந்தபோது "அப்பா......" "அப்பா..." என குரலும் கதவு தட்டப்படும் சத்தமும் கேட்டது ஒரு நிமிடம் அந்தக் குரலில் ஸ்தம்பித்து போனவர், அது தேவியின் குரல்தான் என்பதை தெளிவுபடுத்திக்கொண்டு ஓடிக் கதவைத் திறந்தார்.

கதவைத் திறந்தவர் பலைத்துப்போய் நின்றார். அவரது நிலையைப் புரிந்து கொண்ட தேவி "என்னப்பா யோசிக்கிறியள்... நான் தேவிதான். என்னை அடையாளம் தெரியல்லையோ" என்றாள். அன்றெல்லாம் வீட்டில் சாரிக்குள் தன்னை மறைத்துக்கொண்டிருந்த அவளை, அந்த உடையில் அதுவும் கையில்... பார்த்ததும் மகாசிவத்துக்கு அடையாளம் காண முடியாது போனது என்னவோ உண்மைதான். ஆனால் ஒரு நிமிடத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார்.

"வா... பிள்ளை... வா... எங்கை போனனீ பிள்ளை... நீ இல்லாமல் நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா?" அவளைக் கண்டியணைத்துக் கொண்டுஅழுதார். தேவிக்கும் கண்கள் கசிந்தது. நிலத்தில் விழுமுன்னே அதை நிறுத்திக் கொண்டாள்.

தேவி தந்தையின் அருகே அமர்ந்துகொண்டாள். மெதுவாக தந்தையின் கையைப் பற்றிக்கொண்டு "என்னை மன்னிச்சிடுங்கோ அப்ப.... என்னோட வாழ்க்கையில மாத்திரமல்ல என்னைப்போல் எத்தனைபேர் இந்தப் பிரச்னையாலேயும் சீதனத்தாலேயும் பாதிக்கப்பட்டிருக்கினம் தெரியுமே? இனியெண்டாலும் நாளை வரும் சமுதாயத்திற்கு இந்த அவலம் வரக்கூடாது எண்டதுக்காகத்தான் நான் என்னை அர்ப்பணிச்சுச் கொண்டன். அவள்நிறுத்தியதும் மகாசிவத்தின் கண்களிலிருந்து நீர்பெருகியது.

"நீ... என்னத்த சொல் பிள்ளை... நான் ஏத்துக்கிறதா இல்ல. நீ பொம்பள உனக்குதெல்லாம் சரிப்பட்டு வராது."

"அப்படி நினைச்ச காலமெல்லாம் முடிஞ்சுது இப்ப எங்களாலேயும் வடிவு பிறக்க வாய்ப்பிருக்கு."

"எனக்கென்னமோ உன்னை மணக்கோலத்தில பார்க்கிறதுக்கு பதில் இந்தக்கோலத்தில பார்க்கிறனேன்னு வேதனையாயிருக்கு."

"நான் மணக் கோலத்தில இல்லாட்டி என்னப்பா. நாளைக்கு எங்கட சோதரிகள் எத்தனைபேர் நிம்மதியா மணக் கோலத்தில இருப்பினம் தெரியுமா? அது மட்டுமில்ல நீங்களும் நானும் வாழப்போறது இன்னும் கொஞ்சக் காலந்தான். ஆனால் நம்ம சமுதாயம் இன்னும் எத்தனையோ காலம் வாழும். அவங்கட நிம்மதிக்கும் சுதந்திரத்திற்கும் என்னாலானதைச்செய்யமுடிஞ்சுதே அதையிட்டு நான சந்தோசப்படறேன்" அவள் நீண்டதாகக் கூறியதும் மகாசிவம் மௌனமாகிப் போனார். அவருக்கு ஒன்றுமட்டும் புரிந்தது.

[8ம் பக்கம் பார்க்க]

## உயர்வதற்கு வழி

ஒளிவு மறைவில்லாமல் கூறுங்கள். வாழ்க்கை எப்படி இருக்கிறது? சுவை ததும்புகிறதா? இல்லை— சோகம் நிறைந்து கிடக்கிறதா?

சுவை ததும்புவதாக உண்பவர்களுக்கு ஒரேஒரு யோசனை இப்போது போலவே எப்போதுமிருக்க முயற்சி செய்யுங்கள். இன்பம் எப்போதும் பொங்கி வழியும்!

துன்ப மயமாக—தொலையாத இருள்மயமாக உலகம் இருப்பதாக நினைப்பவர்களுக்கு ஒருகேள்வி. நீங்கள் எந்தக் குறிக்கோளுடன் முன்னேறிக்கொண்டிருக்கிறீர்கள்? இதற்கு விடை கூறுமுன் நீங்கள் நடந்து வந்தபாதையை தயைகூர்ந்து திரும்பிப் பாருங்கள். உங்க வயதில் நீங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றம் கண்டிப்பாக வியப்புத் தருவதாக இருக்கவேண்டும்!

அந்தஅளவிற்குத் தன்னம்பிக்கை கொள்ளுங்கள் ஆனால் திருப்தி கொள்ளாதீர்கள் திருப்தியடைந்துவிட்டால் பிறகு முன்னேற்ற எண்ணம் முனைமுறிந்துபோய் விடும் தன்னம்பிக்கையோடு இலட்சியவாதிகளின் உலகத்தைப் பாருங்கள்! அங்கே ... அரும்பு மீசை முளையாத பருவத்திலேயே உங்கள் வயதிலேலே பெரும் புகழ் அடைந்தவர்களை— வாழ்க்கை வசதியினைப் பெற்றவர்களைக் காண்பீர்கள். அவர்கள்போல் நாமும் ஆகவேண்டும்— எனும் ஆர்வக்கனலை உங்கள் இருதயத்தில் ஏற்றிக்கொள்ளுங்கள்.

# ஓர் இனிய பயணம்

இந்து சமயத்தவரின் புண்ணிய தலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த தலம் காசியாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை மிக்கது. முக்தித் தலம் ஏழினுள் முதன்மையானது. காசியில் இறக்க முத்தி என்னும் பெருமையுடையது வாரணாசி, பனாரிஸ் போன்ற பல பெயர்கள் இத்தலத்திற்குண்டு.

அண்மையில் நான் எனது மனைவியாருடன் காசியாத்திரை செய்யும் பாக்கியம் பெற்றேன். நான் காசியாத்திரை முடித்து வந்தபின்னர் எனது நண்பர்கள் சிலர் தாங்களும் காசியாத்திரை போகவேண்டுமென்ற விருப்பத்தினால் எனது யாத்திரை விபரங்களைக் கேட்டறிந்தனர். எனது யாத்திரை அனுபவங்களை கட்டுரையாக எழுதினால் அது காசி யாத்திரைமேற்கொள்ளும் பலருக்கு உதவியாக இருக்கும் என்ற கருத்தினால் அதைக் கட்டுரையாக எழுத எண்ணினேன்.

இந்தியத் திருத்தலங்களுக்கு யாத்திரை செய்பவர்கள்உரிய நேரப் பிரயாணம். எனவே படுக்கை வசதியுடன் ஆசனப் பதிவு செய்யாமல் பிரயாணம் செய்வது மிகச்சிரமமாகும். உலகிலேயே மிகப்பெரிய புகையிரத சேவையை நடத்தும்இந்தியா வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு சில வசதிகள் செய்துள்ளது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு பிரயாண ஆலோசனைகள் வழங்கவும், பயணச் சீட்டுகள் வழங்கவும் முக்கிய புகையிர நிலையங்களின் பிரத்தியேக கவுண்டர்கள் உண்டு. முக்கிய புகையிரதங்களில் வெளிநாட்டுப் பயணிகளுக்கென சில ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன இந்த ஆசனங்களை வெளிநாட்டுப் பயணிகள் தங்கள் பாஸ்போட்டைக் காண்பித்து ஓரிருதினங்கள் முன்னதாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டுப் பிரயாணிகள் நீண்ட தூரம் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு சலுகைக் கட்டணத்தில் ''இன்றெயில் பாஸ்'' என்ற பயணச்சீட்டை வெளிநாட்டுச் செலாவாணி

## த. சண்முகலிங்கம்

(செயலாளர், சைவபரிபாலனசபை)

பிரயாண தங்குமிட வசதிகள் பற்றிய விபரங்களை அறிந்து யாத்திரை செய்தால் சிரமக் குறைவு மட்டுமல்லாமல் யாத்திரையின் பயனையும் மன நிறைவையும் பெறமுடியும். தலயாத்திரை செய்பவர்கள் கையில் தூக்கிச் செல்லக்கூடிய குறைந்தளவு உடுபிடவைகள் கொண்டு செல்வது பிரயாணத்துக்கு வசதியாக இருக்கும். அத்துடன் படுக்கை விரிப்பு, தலையணி, டார்ச்லைட், பூட்டு, சில கைமருந்து வகைகள் முதலியவற்றை கொண்டுசெல்வது நல்லது.

நாம் 19- 4- 86 அன்று கொழும்பிலிருந்து விமான மூலம் சென்னை சென்றடைந்தோம் சிலதினங்களின் பின்னர் சென்னை 'சென்றல்' புகையிரத நிலையம் சென்று 29-4-86 அன்று காசிக்குப் புறப்படும் 'கங்கை காவேரி எக்ஸ்பிரஸ்' அல்லது 'வாரணாசிஎக்ஸ்பிரஸ்' என்ற புகையிரதத்திற்கு படுக்கை வசதிகொண்ட பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டேன். இந்தப் புகையிரதம் மட்டும்தான் காசிக்கு நேரே செல்கிறது. இப்புகையிரதச் சேவை வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டும் நடைபெறுகிறது வழமையாக இப்புகையிரதத்திற்குரிய பிரயாணச் சீட்டுக்கள் சிலவாரங்களுக்கு முன்னதாகவே விற்பனையாகிவிடும் நாம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் என்றபடியால் சிரமமின்றி பிரயாணச் சீட்டைப் பெற்றுக்கொண்டோம்

காசி சென்னையிலிருந்து 2 50 கிலோ மீட்டர்தூரம் 36 மணி

கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

29-4-86 காலை 8-00 மணிக்குச்சென்னை 'சென்றல்' புகையிரத நிலையத்திலிருந்து ''கங்கை -காவேரி எக்ஸ்பிரஸ்'' புகையிரதத்தில் காசிக்குப் புறப்பட்டோம். இப்புகையிரதம் இத்தாரிசி சந்திப்பு மார்க்கமாகச் சென்று மறுநாள் இரவு 9-00 மணிக்குகாசியைச்சென்றடையும்.

தென்னிந்திய மாநிலங்களான கேரளம், கன்னடம், தெலுங்கு, தமிழ்நாடு முதலிய பகுதிகளிலிருந்து வெவ்வேறு மொழி பேசுபவர்கள் எமது புகையிரதத்தில் பயணம் செய்தார்கள். அநேகர் வடஇந்தியத் தலயாத்திரை செய்பவர்களாகக் காணப்பட்டார்கள். உடனிருந்த மொழி தெரிந்த பிரயாணிகளுடன் உரையாடுவதிலும் பத்திரிகைகள் புத்தகங்கள் வாசிப்பதிலும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதிலும் எமது நேரம் அலுப்பில்லாமல் கழிந்தது.

உணவு முதலியன எமது ஆசனங்களுக்கு கொண்டுவந்து தரப்படுகிறது. உணவு, பழங்கள், குடிநீர் முதலியன புகையிரத நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். கோடை காலமாகையால் கடுமையான வெப்பம் குடிநீர்தான் அதிகம் தேவைப்பட்டது. பெரிய பாத்திரத்தில் குடிநீர்கொண்டு சென்றோம். வடஇந்திய புகையிரதங்களில் திருடர்கள் தொல்லை அதிகமாகையால் நகை, பணம் ஆகியவற்றை கவனமாக வைத்துக்கொள்வதுடன் இரவில் யன்னல் கதவுகளையும்பூட்டிவைக்கவேண்டு.

30-4-86 மாலை 7-00 மணிக்கு எமது புகையிரதம் உத்தரப்பிரதேசத்திலுள்ள அலகபாத் சந்திப்பைவந்தடைந்தது. காசி யாத்திரை செய்பவர்கள் அலகபாத்திலுள்ள திரிவேணி சங்கமம் அல்லது பிரயாகையில் நீராடிச் செல்வது மரபாகும். இங்கு கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் ஒரிடத்தில் சங்கமிக்கின்றன. அதனால் இது திரிவேணி சங்கம் என்று பெயர் பெற்றது. எனவே நாம் அலகபாத் புகையிரத நிலையத்தில் இறங்கி மொழி தெரிந்த வழிகாட்டி ஒருவர் மூலம் ஒரு சத்திரம் சென்று தங்கினோம்.

அலகபாத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் உண்டு என்பதையும் அங்கு சென்று தங்குவது எமக்கு வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்குமென்பதையும் நாம் முன்னரே அறிந்திருந்தும் சத்திரத்தின் விலாசம் தெரியாததினாலும் மொழிப்பிரச்னையாலும் அங்கு செல்லமுடியவில்லை. நாம் சென்று தங்கியசத்திரம் ஓர்வடநாட்டுச் சத்திரம். ஆனால்அச் சத்திரத்தின் பொறுப்பாளர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமணர். இவர் எமக்கு எல்லா வசதிகளையும் செய்து தந்தார். அடுத்தநாள் காலை பிரயாகையில் நீராடுவதற்காக யமுனை நதி கரை சென்று தனிப்படகு ஒன்றில் இரண்டு மைல் தூரத்திலுள்ள சங்கமத்திற்குச் சென்றோம்.

பிராயகையில் நீராடுவதற்கு முன்னர் மொட்டை அடித்துக் கொள்ளவேண்டுமென்பது மரபு. நான் முகச்சவரம் செய்து கொண்டேன். இதைச் செய்பவர்கள் பலர் கரையில் இருக்கிறார்கள். கங்கை வெண்மையாகவும் யமுனை கருமையாகவும் வந்து கலப்பது நன்றாகத் தெரிகிறது. சரஸ்வதி கண்களுக்குப் புலப்படாது அதுஅடியில்கலப்பதாகச்சொல்கிறார்கள். கங்கையும் யமுனையும் ஆழமாகவும் ஒருமைல் அகலமாக ஓடுகின்றன. சங்கமம் மேடாக உள்ளது. நாலு. ஐந்து அடி ஆழம் தான் இந்த இடத்தில் இருக்கிறது. பண்டாக்கள் (புரோகிதர்கள்) பலர் படகுகளில் இருந்து கொண்டே கிரியைகள் செய்து வைக்கிறார்கள். சங்கற்பம் செய்து கொண்டு நீராடிய பின்னர் கங்கா பூசை முதலிய கிரியைகளைச் செய்து கொண்டோம். பூசைக்குத் தேவையான பால், பழம், புஸ்பம் முதலியன நாம் கொண்டு சென்றோம்.

[தொடரும்]



பிரபல எழுத்தாளரும் 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. டொமினிக் ஜீவாவின் மணிவிழாவையொட்டி இலக்கிய அன்பர்கள் அண்மையில் நடத்திய தேநீர் விருந்தின் போது துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஜீவாவுக்கு மாலை அணிவிக்கிறார். அருகில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) காணப்படுகிறார்.

## சுகவாழ்வுக்குச் சிரிப்பு....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நோய்வாய்ப் பட்டிருந்து சிரிக்கவும் தொடங்குவார்களானால், கண்டிப்பாக அவர்களின் வியாதி தீர்ந்து எழுவர் என்பது உறுதி.

பெண்கள் சிரிப்பு ஒரு தனிரகம். அவர் எப்போதும் சிரிப்பதற்குத் தயாராயிருப்பார்கள். ஆனால், அழுகைதான் அவர்களை அடிக்கடி சூழ்ந்துகொள்ளும். அசட்டுச் சிரிப்புச் சிரிப்பர், பெரும்பாலும் காரணம், பெண்களின்பலவீனம்தான்! பலவீனர்களுக்குரியதானே அசட்டுச் சிரிப்பு?

ஆனால் ஆண்களோ சிரிக்க வேண்டிய இடத்திலெல்லாம் காரணம் கருதி சிரிக்காமல் இருப்பார்கள் சமயம் வாய்க்கும்போது இத்தனை நாள் அடக்கிவைத்திருந்த சிரிப்பையெல்லாம் சேர்த்து வயிறுவலியெடுக்கச்சிரித்து விடுவார்கள்.

பெரு மேதைகளுக்குரியது இதயச்சிரிப்பு! அது மனம் நன்றாகப் பண்பட்டவருக்குக் கிடைத்திடும் ஓர் அருஞ்சொத்து. சாதாரண மனிதர்கள் பின்பற்றமுடியாத ஒன்று.

சோகம் மனிதர்களைப் பிரிக்கிறது. ஆனால் சிரிப்பு மனிதர்களை ஒன்றுசேர்க்கிறது. உங்கள் உள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை வெளியிடும் வால்வாகப் பயன்படுகிறது சிரிப்பு!

வெறுப்பு, வஞ்சம், அலட்சியம், விரகதாபம், கோபம்- போன்ற உணர்ச்சிகளைக் கூட வெளியிடும் சிரிப்பு உண்டு. ஆனால் அவைகளைச் சிரிப்பில் உள்ளடக்குவது சரியல்ல

மனம் விட்டுச் சிரிப்பதால் மேற்கண்ட உணர்ச்சிகள் மங்குவது உறுதி. அதுபற்றி டாக்டர் ஜி கே செல்போர்ன் என்பார் எழுதுகிறார்;

''நாகரிகமான பக்குவமடைந்த நகைச்சுவை கலந்து பேசும் பண்பு பேச்சாளர்களிடையேயும் அரசியல் தலைவர்களிடையேயும் வளர்கிறது. இது மக்களிடையே உண்மையைப் பரப்புவதோடு இழிதகு காரியங்களை செய்யவொட்டாது தடுக்கிறது. இதைபிரிட்டிஷ் மக்களிடம் முழுமையாக காணலாம். அந்தக் காலம் தொட்டு அவர்கள் இந்த முறையைக் கையாண்டு வருகிறார்கள். அதனால்தான் பிரிட்டிஷ் மக்கள் வெறிகொண்டவர்களாக விவேகமில்லாதவர்களாக உள்நாட்டில் நடந்து கொள்வதில்லை.

''அதனால்தான் சமுதாயப் புரட்சிகளும் அரசியல் புரட்சிகளும் இங்கிலாந்தில் எத்தனையோ நடைபெற்றிருந்தாலும் அத்தனையும் நெறி தவறாது நடந்திருக்கின்றன!''

எனவே அரசியல் மேடையிலும் நகைச்சுவைக்கு- சிரிப்புக்கு- முக்கியமானதோரிடம் இருக்கவேசெய்கிறது.

உலகநாடுகளிடையே நல்லுறவு வளர இதுஉதவுகிறது. சிரித்துப்பேசும் நாட்டுத் தலைவர்களைப் பார்க்கும் போது ஏற்படும் மக்கள் மனநிலை, சிரிக்காத தலைவர்கள் பேசும் போது ஏற்படுகிறதா?

தொடர்ந்து சிரித்துக் கொண்டேயிருப்பவனை 'இளித்தவாயன்'— என்று கண்டனம் செய்கிறார்கள் உலகில் பெரும்பான்மையோர் எந்தளவு சிரிக்கவேண்டுமோ அந்தளவுசிரிப்பதில்லை! எனவே சிரித்துக்கொண்டேயிருப்பவனை 'இளித்தவாயன்' என்கிறார்கள் கோவணம்கட்டுவோர் உலகில் வேட்டி கட்டுபவன் பைத்தியக்காரன்தானே?

நல்லறிவுடையவர்கள் எப்போதும் சிரித்துக்கொண்டிருக்கமுடியாது. சிரித்துக் கொண்டேயிருப்பதன் மூலம் சிரிப்பின்சுவை தெரியாது! சோகமும்தேவை! சமுதாயம் அந்தச் [சோகக்] கசப்பை தானாகவே தந்துகொண்டிருக்கும்! எனவே மூடமதியுடையோர்- சோகமுகவிலாசர்கள் பேசும் மொழிக்கஞ்சி சிரிப்பெனும் அமுதத்தை எரிஅடுப்பில் கொட்டிவிடக்கூடாது.

அளவோடு சிரிப்பவர்கள் சிரிக்காத முகத்தவர்களைக் காட்டிலும் அறிவுடையோராகத்தான்—ஈரநெஞ்சுடையவர்களாகத்தான் இருப்பார்கள்! அதிகமாகச் சிரிபபது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாத மனதைக் காட்டுவதாக இருக்கலாம்! எந்தவித பாதுகாப்புமில்லாத இந்த உலகைக் காட்டிலும் அந்த மனப்பண்பு ஒன்றும் மோசமானதில்லை! அனுதாபம் காட்டாது உணர்ச்சிகளை அடக்கி வைக்கும் கொடுஞ்செயலைவிட அந்தமனப்பண்பு எந்தவகையில் மோசம்?

டாக்டர்கள் நாம்இப்போது சிரிப்பதைக்காட்டிலும் அதிகம் சிரிக்கவேண்டுமென நினைக்கிறார்கள். உரக்கச் சிரிக்க வேண்டுமெனவும் நினைக்கிறார்கள்!

## மஹாகவிபற்றி

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

போலித்தனங்களுக்குத் தோற்று விடாத நெஞ்சுரத்தைக் காட்டியவர் என்பதற்கு அவரது கவிதையாக்கங்கள்பல சான்றாக உள்ளன. ஆனால் சமகாலத்தில் முனைப்புப் பெற்றிருந்த-பொதுவுடைமை சார்பான முற்போக்கு இலக்கிய அணியின் சிந்தனை வட்டத்திற்குள் அவர் தன்னை இணைத்துக்கொண்டவரல்ல, சமுதாயப் பிரச்சினைகளைக் கோட்பாட்டு ரீதியில் அணுகும் ஒரு ஆய்வாளனாக அன்றி மனித நேயத்தோடு புரிந்து கொள்ள முயலும் ஒரு கலைஞனாகவே அவர் திகழ்ந்தார். அவரது கவிதைகள் பலவற்றில் உலகியல் இன்பநாட்டம் காணப்படுகிறது என்பதை மறப்பதற்கில்லை ஆனால் அத்தகையனவஅவரதுகவிதையாக்கங்களில் ஒரு பகுதியே என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகும். மஹாகவி தொடர்பாக எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஆய்வுகளில் மேற்குறித்த அம்சங்கள் விரிவான தளத்தில் ஆராயப் படத்தக்கன. (தொடரும்)

## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

'இவள் அதிகமாக் கற்றுக் கொண்டுவிட்டாள். சமுதாயத்தைப் புரிந்துகொண்டுவிட்டாள் என்பதே அது.

மகாசிவம் ஏதாவதுசொல்ல வேண்டுமென நினைத்தார். ஆனால் வார்த்தைகள்தாம் வரவில்லை. அதற்கிடையில் தேவியே ''இந்த சமுதாய ஏற்றத்தாழ்வு சமனாகணும் இப்ப ஏற்பட்டிருக்கின்ற பிரச்னையை ஒருசமுதாயப் பிரச்னையாகக் கருதவேண்டும். அதுவரைக்கும் விடிவின் பாதையில் நிறைய காரிருள் தெரிவது மட்டுமல்ல என்போன்றோரின் வாழ்வும் சீரழியும்'' மனதில் பட்டதைச் சொல்லிவிட்டு எழுந்துகொண்டாள்.

''சரியப்பா இனி நான் அடிக்கடி வந்து பார்க்கிறன். ஆனா நான்எங்களப்படி இருக்கிறேன் என்டெல்லாம் நினைச்சு கவலைப்படாதையுங்கோ. அப்போ நான் வரட்டே'' அவள்விடை பெற்றுக் கம்பீரமாக இறங்கி நடந்தாள்.

வாசல் வரை வந்து நின்று மகள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றார் மகாசிவம். சாரியுடன் வீட்டில் பதுங்கியிருந்த தன்மகள் தனக்கென ஒரு அற்பவாழ்க்கைக்காககாத்திருந்த தன்மகள் தியாகத்தின் எல்லையில் 'சுதந்திரத்தை' தேடும் 'பாவையாய்' கம்பீரமாக நடந்து போவதைப் பார்த்தபோது அவருக்கு மனமெல்லாம் நிறைந்தது. அவர் மனதுக்குள்ளேயே சொல்லிக்கொள்கிறார் ''அவள் ஒரு சமுதாய சித்திரம்.''

[யாவும் கற்பனை]

''ஈழநாடு''
12- 7- 87 வாரமலரில்
கோகிலா மகேந்திரன்
எழுதும்
தூவானம் கவனம்
நாவல் ஆரம்பம்

## மொழி உணர்வு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பெண்கல்வியை வலியுறுத்தும் போது?

''படியாத பெண்ணாயிருந்தால் கேலி பண்ணுவார்
உன்னை இவ்வூரார் தெரிந்தால்
மலைவாழையல்லவோகல்வி''

என்று கூறிப் பெண்கல்வியின் முதன்மையை உணர்த்துகிறார்.

இடைக்காடு வளலாய் பகுதியில்

# மூடப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு வேறு இடங்களில் தற்காலிக ஏற்பாடு

(அச்சுவேலி நிருபர்)

இடைக்காடு வளலாய் பகுதியிலுள்ள 4 பாடசாலைகள் மூடப்பட்டு அவற்றின் வகுப்புக்கள் புத்தூர் நீர்வேலிப் பகுதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளன.

இடைக்காடு மகாவித்தியாலயம் வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலம் பத்தமேனி ஸ்ரீ விபசி பௌத்த பாடசாலை என்பன மூடப்பட்டுள்ளன.

இந்தப்பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் புத்தூர் நீர்வேலிப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் தமது வரவு கையொப்பத்தை இட்டு வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இடைக்காடு மகாவித்தியாலயம் புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தக் கல்லூரியிலும் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை பத்தமேனி விபசி பௌத்த பாடசாலை என்பன நீர்வேலி சீ.சீ தமிழ்க் கலவன் பாடசாலை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் என்பனவற்றில் செயற்படவுள்ளன.

# ‘வடமராட்சி அட்டூழியங்கள் எம்கண்களை திறந்துள்ளன’

## மாணவர் கூட்டத்தில் உரை

(பண்டத்தரிப்பு நிருபர்)

“வடமராட்சிப் பிரதேசத்தில் அரசின் ஆயுதப்படையினர் நடாத்திய அட்டூழியங்களும், அநியாயங்களும் இன்று எமது கண்களைத் திறந்துள்ளன. திருமலை, வவனியா, மன்னார், மட்டக்களப்பு பிரதேசங்களில் கடந்த பல வருட காலமாக இந்த அட்டூழியங்களும் அநியாயங்களும் இடம் பெற்றுவந்துள்ளன. இந்தப் போராட்டத்தில் நாம் தோற்றால் தமிழினத்திற்கு விடிவே இல்லை.”

இவ்வாறு தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்படுவதையும், பாடசாலைகளில் இராணுவம் முகாமிட்டிருப்பதையும் கண்டித்து பண்டத்தரிப்பு உயர் வகுப்பு மாணவர்களால் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட ஒரு நாள் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் திருகோணமலை நகரசபை உப தலைவர் வீரசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

பெருந்தொகையான மாணவர்கள் கலந்துகொண்ட இந்த உண்ணாவிரதத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

“திருகோணமலையில் தனிச் சிங்களச்சட்டத்தை எதிர்த்து 1958-ம் ஆண்டு நடத்தப்பட்ட போராட்டத்தில் திருமலை முற்றவெளியிலுள்ள மணிக்கூட்டுக்கோபுரத்தில் ஏறி கறுப்புக்கொடியை ஏற்றிய இளைஞன் திருமலை நடராஜனை இராணுவம் சுட்டுக் கொன்றது

திருமலையில் திட்டமிட்டு சிங்களக்குடியேற்றங்கள் நடைபெற்ற வேளைகளில் எல்லாம் அங்குள்ள தமிழர்கள் எதிர்ப்புத்தெரிவித்தார்கள்.

“முப்பது ஆண்டுகளுக்கு முன்பு திருமலையில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி யாழ். மாவட்டத்திலும் தீவிரமாக ஏற்பட்டிருந்தால் இன்றைய அவல நிலை ஏற்பட்டிருக்காது.

“இன்றைய போராட்டம் யாழ். மாவட்டத்தை மட்டும் காப்பாற்றும் போராட்டமாக இருக்காது திருமலை, வவனியா மன்னார், மட்டக்களப்பு ஆகிய சகல தமிழீழ பிரதேசங்களையும் மீட்டெடுத்து பாதுகாக்கும் போராட்டமாக விளங்க வேண்டியது அவசியம்.

“அன்று தந்தை செல்வா கட்டிய அத்திவாரத்திலிருந்துதான் இன்றைய போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

“எமது மண்ணையும், மொழியையும், இனத்தையும் பாதுகாக்க எமது இளைஞர்கள் இன்று நடாத்திவரும் வீரப் போராட்டங்கள் மக்கள் போராட்டமாக மறுமலர்ச்சி அடைந்துவிட்டது.

பண்டத்தரிப்பு விழிப்புக் குழுத் தலைவர் ஏ. எஸ். செபரத்தினம் உரையாற்றுகையில், இராணுவம் பாடசாலை மாணவர்களை கைது செய்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் போராட்டத்தை அழித்துவிட முற்படுகின்றது என்றும், இதனை மாணவ சமுதாயம் தடுத்துநிறுத்துவதற்குத் தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் கூறினர்.

திரு. சபா. நாராயணன் உரையாற்றுகையில், தமிழீழப் போராட்டத்திற்கு பொருளாதார அபிவிருத்தியின் அவசியம் பற்றி எடுத்துக் கூறினர்,

“சிங்கள மாணவருக்கு பல் கலைக்கழம் தமிழ் மாணவருக்கு பூஸா முகாமா?” என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளும் அங்கு காணப்பட்டன.

★ நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்களுக்கு கிடைக்காமல் இருந்த எல். பி. காஸ்

இப்பொழுது தாராளமாக விநியோகிக்கப்படுகிறது!

L. P. GAS

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் தடங்கலின்றி விநியோகிப்பவர்கள் :

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,

[L. P. காஸ் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்]

131, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

(ஏ-134)

விற்பனைக்கு

‘றெமிங்டன்’

ரைப்றைட்டர்கள்

தமிழ், ஆங்கிலம்

இப்பொழுது விற்பனையாகின்றன.

எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய, நடுத்தரமானவை சொற்ப கையிருப்பில் மட்டுமே உள்ளன.

விற்பனை விலை 6,350/- முதல்

ஏக விநியோகஸ்தர்கள்:

ஓவர்சீஸ் இன்ரநஷனல்

[முகமதலி அப்துலலி பின்னல்]

5, 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வர்த்தக விசாரணைகள்:

351 (589), நாவலர் வீதி,

(கைலாசபிள்ளையார்-கோவில் சந்தி),

(சி-9676) நல்லூர், யாழ்ப்பாணம்.

## இடமாற்றத்தை ரத்துசெய்க

கொழும்புத்துறை வெள் யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக்கழகச் செயலாளரானயாழ் பிரதேச மலேரியா ஆய்வு கூடத்தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. வி. இராஜதுரையை அனுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தரவை ரத்துச் செய்யுமாறு பொதுஸ்தானங்கள் யாழ் மாவட்ட அமைச்சரையும் யாழ் அரசாங்க அதிபரையும் கோரியுள்ளன.

## மின்இணைப்பு துண்டிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். அபிவிருத்திச் சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலப் பகுதியில் சட்டவிரோத மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டு வருகின்றன.

# அதிபர் அறை, விஞ்ஞானகூடம் உடைக்கப்பட்டு சேதம்

(அச்சுவேலி நிருபர்)

இடைக்காடு மகா வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன உடைத்து சேதப்படுத்தப்பட்டிருப்பதுடன் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இடைக்காடு மகா வித்தியாலயம் அமைந்திருக்கும் பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பாடசாலை செயற்படாமல் மூடப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக பாடசாலையில் எதுவித சேதமும் இல்லாமல் பாதுகாப்பாக இருப்பதாகவும் கடந்த சில நாட்களுக்குள் சீருடை அணிந்தவர்கள் உட்புகுந்து அதிபரின் அலுவலகத்தை உடைத்து அங்கிருந்து வசதிககட்டண பணம் மின் விசிறி தொலைக்காட்சி உபகரணங்கள் உட்பட பல பெறுமதியான பொருட்களை அப்புறப்படுத்தியுள்ளனர்.

விஞ்ஞான ஆய்வுகூடமும் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

### புத்தூருக்குஇடமாற்றம்

இடைக்காடு மகா வித்தியாலயத்தின் சகல வகுப்புக்களும் புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியில் நடைபெறும்.

இடைக்காடு பகுதி இராணுவ நடமாட்டம் உள்ள பகுதியாக இருப்பதால் கடந்த மாதம் 6ம் திகதி தொடக்கம் இடைக்காடு மகாவித்தியாலயம் செயற்படாமல் மூடப்பட்டுள்ளது.

வடமாநில கல்வித்திணைக் களத்தின் விசேட அனுமதியை அடுத்து புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வகுப்புக்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியும் இடைக்காடு மகா வித்தியாலயமும் ஒரே நேரத்தில் செயற்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இடமாற்றம்

சுபாஸ் கிறீம் ஹவுஸ்

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்காலிகமாக

சுபாஸ் ரூரிஸ்ட் ஹோட்டலுக்கு

மாற்றப்பட்டுள்ளது

என்பதை அறியத்தருகிறோம்.

[எ-131]

யாழ்ப்பாணக் கல்லூரி

தொழில்நுட்ப நிறுவனம்

கல்வி ஆண்டு 87/88

புதிய கல்வி ஆண்டு வகுப்புக்கள் 1-7-87ல் ஆரம்பமாகிவிட்டன. சகல மாணவர்களும் உடனடியாக தவணைப்பணத்தை செலுத்தி, பெயர்களைப்பதிவு செய்து, தொழில்நுட்பக் கல்வியை/பயிற்சியை தொடருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பணிப்பாளர்,

[எ-133]

அறிவித்தல்

யாழ். ஆஸ்பத்திரி கட்டட வேலைகள் மீண்டும் தொடங்குவதற்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

சகல தொழிலாளர்களும் தொடர்பு கொள்ளவும்.

சமக்கோன் லிமிட்டெட்,

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9695)

வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள

புளோவர் [Blowers]

கெல்பர் [Helpers]

பபுளர் [Bubblers]

போன்றவர்கள் உடனடியாகத் தேவை.

16—19 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் வேலைபழகுவதற்கும் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி.

[சி-9696]

## ஈழப்போராட்டத்தை— அங்கீகரிக்கக் கோரி வன்னியில் ஊர்வலம்

(முல்லைத்தீவு நிருபர்)

வன்னிப்பகுதி மக்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தை இந்தியாவும் ஏனையநாடுகளும் அங்கீகரிக்கவேண்டுமென்று கோரி தொடர்ச்சியான உண்ணாவிரதம் ஊர்வலங்களைமேற் கொண்டனர்.

முள்ளியவளை, புதுக்குடியிருப்பு தண்ணீர்ஊற்று ஒட்டு சுட்டான்' சம்மளங்குளம் நெடுங்கேணிகற்சிலைமடு ஆகிய இடங்களில் விரதமும் ஊர்வலங்களும் நடைபெற்றன பெரும் தொகையான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் இந்தியா இலங்கை தமிழ்மக்களினதுவிடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமெனக்கோரிபல சுலோகங்களை தாங்கிய வண்ணம் சென்றனர்.

## "மேலதிக பாலை அகதிகளுக்கு வழங்கவும்"

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்ட பாற் பண்ணையாளர்களிடம் உள்ள மேலதிக பாலை றெட்பானா ஸ்தாபனம் பெற்று, அகதிகள் முகாமில் தங்கியுள்ளோருக்கு விநியோகிக்க முன்வரவேண்டும் என வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தேசிய பாற்சபையினர் யாழ்ப்பாண பண்ணையாளர்களிடமிருந்து பசுப்பாலை உரிய வேளைகளில் பெற்றுக்கொள்ளத் தவறுகின்ற காரணத்தால் பண்ணையாளர் தம் பாலினை தெருக்களில் வைத்து குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைக்குள்ளாகின்றனர். சிலசமயங்களில் பால் பழுதடைந்து பண்ணையாளர் நஷ்டமடையவும் நேரிடுகிறது.

எனவே பண்ணையாளரின் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யவும் கஷ்டப்படும் அகதிமுகாம்களுக்கு இப்பாலை பெற்று விநியோகித்து அவர்களுக்கு உதவவும் றெட்பானா ஸ்தாபனம் முன்வரவேண்டும் (மா)

## குருநாகல் 10வது மறைமாவட்டம்

(கொழும்புத்துறை நிருபர்)

கத்தோலிக்க திருச்சபையின் சிபார்சை அடுத்துப் பாப்பரசர் இரண்டாவது அருள் சின்னப்பர் இலங்கையின் பத்தாவது மறை வட்டமாகக் குருநாகல் பகுதியைப் பிரகடனப் படுத்தி உள்ளார்.

குருநாகல் மறை வட்ட ஆயராக வண. பிதா றேமன்ட் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதம் 18ம் திகதி வண. பிதா றேமன்ட் பீரிஸ் ஆயராகக் குருநாகல் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்படுவார்.

## 10 லட்சரூபா செலவில் கட்டிடம்

மண்டைதீவு சனி வேலணைப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் 10 லட்சம் ரூபா செலவில் இச் சங்கத்தின் மேல் மாடிக்கட்டிடத்தைக் கட்டி முடிக்கவுள்ளது.

இச்சங்கக் கட்டிடத்தின் தரைக்கட்டிடத்தில் இயங்கும் சங்க அலுவலகங்கள் மேல் மாடி வேலைகள் பூர்த்தியானதும் மேல்மாடிக் கட்டிடங்களிலே இயங்க வசதிசெய்யப்படும் என்றும் தற்பொழுது பாவிக்கப்படும் கட்டிடம் விற்பனை நிலையங்களாக மாற்றப்படும் என்றும் பொதுமுகாமையாளர் எஸ். செலலத்துரை தெரிவித்தார்.


# LONDON EXAMS

(Nov./Dec. '87)

ஆரம்பம்: 11-7-87

I. C. M. A. (Cima)
Stages I & II

A. A. T.
Prelim.

விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி
S. P. சிவஞானம்
S. சிவபாலன்

மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

குறிப்பு: ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 500 விரிவுரை மணித்தியாலங்கள் எடுக்கப்படும்

விபரங்களுக்கு:

# RAPID RESULT INSTITUTE

212, கச்சேரி – நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[ஏ 111]


# இவ்வாரம் எப்படி?

### மேடம்

எண்ணியது எண்ணியபடி நடக்கும், நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவீர்கள், காதல் வசப்பட்டவர்களுக்கு வியப்பானவாரம், பணவிடயத்தில் அவதானம் செலுத்தவும், குடும்பத்திலும் கசப்புகள் தோன்றிமறையும்.

### இடபம்

சிறியவிடயங்கள் கூடஇன்று சிரமமாகத் தோன்றும். வாழ்விலும் புதிர் தோன்றும், போக்குவரத்து விடயத்தில் அவதானம்வேண்டும்,தொழில் துறையிலுய திருப்பங்கள் தோன்றும், பெரியோர் ஆதரவுமுண்டாம்.

### மிதுனம்

பெற்றோரின் ஆசி நல்வழிக்கு வித்திடும், கடமையிலும் ஆர்வம்பிறக்கும்.புண்ணியகாரியங்களை மேற்கொள்ளுவீர்கள், போக்குவரத்து விடயத்திலும் அவதானம்வேண்டும். இவ்வாரம் பொருளும்தவறலாம் அவதானம் வேண்டும்.

### கடகம்

தொழில் நலனுமுண்டு, தொல்லைகள் நிவர்த்தியுமுண்டாம், அரசியல் வாதிகள் லாபமடைவர், பெண்கள் இவ்வாரம் அவதானம் வேண்டும், பிறர்விடயத்தில் தலையிடாதிருக்கவும்.

### சிங்கம்

தொழில்முன்னேற்றம்இருப்பினும் தடைகள்பல உருவாகும், மேலதிகாரிகளின் ஆதரவுகிட்டும், மாணவர்களுக்கு மகத்தானவாரம், பொருள் தவறக்கூடலாம், நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும், அவதானம்.

### கன்னி

விரக்தி மனப்பான்மை தோன்றும், கடமையும்வீழ்ச்சி பெறும், உஷாராகயிருக்கவும், சுற்றுடலிலும் மதிப்பிற்கிடமுண்டு, வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் ஆவர்வம் செலுத்துவீர்கள்.

### துலாம்

கடற்றொழிலாளர்கள் இவ்வாரம் அவதானம் செலுத்த வேண்டும், அன்னிய வாசம் அகால போசனமுண்டாம், நீண்டநாள் பிணக்கு இன்று சமரச முடிவைத்தரும், கைத்தொழில்விருத்திபெறும்.

### விருச்சிகம்

கல்வி நலனுண்டு, கடமையிலும் பலனுண்டு, குடும்ப மேன்பாடுமுண்டாம், அவசரப் போக்கைத் தவிர்க்கவும், அன்னியர் சேர்க்கைகூடாவாம்.

### தனுசு

சிறிய விஷ பயத்திற்குமிடமுண்டாம், போட்டி விவகாரங்களைத் தவிர்க்கவும், பொறுமை அவசியம், தனவரவுண்டு, தொழிலில்சமவிருத்தியுமுண்டாம்.

### மகரம்

மாதுருவழியிலும் நற்செய்திகிட்டும், மனைவாழ்வும் மலரும் தொழில் சமநிலை தோன்றும், ஆயுதபீடையுண்டு, அவதானமாக இவ்வாரத்தைக் கழிக்கவும்.

### கும்பம்

வியாபாரிகள் நன்மை பெறுவர், விருந்தினர் வருகை உற்சாமளிக்கும், நீர்த் தொழில் விருத்திபெறும், எதிரிகளும் காத்திருப்பர், முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும்.

### மீனம்

கடமையில் தடைகள்தோன்றும், வீண்செலவுகள் அதிகரிக்கும், பிணிக்குஇடங்கொடாது நடக்கவும், மாணவர்களாயின் பொறுமைநன்று, குடும்பத்திலும் புதிர்தோன்றும்.

திருமலை ரவீந்திரன்

## ஆலோசனை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

லண்டன் 'சிட்டி அன்ட் கில்ட்ஸ்' பொறியியல் பரீட்சை சம்பந்தமாக, இப் பரீட்சைக்குத்தோற்றும் பரீட்சார்த்திகளின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி நிறுவனத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 7-ந் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவது, அதன் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

## மாடுகளுக்கு போஷாக்கூட்டும் கருத்தரங்கு

(உடுவில்)

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் சுன்னுகம் கிளையில் இன்று காலை மாடுகளுக்குப் போஷாக்குத் தன்மையைக் கூட்டுவது சம்பந்தமாக கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

வைக்கோலுடன் யூரியாக் கலந்து போஷாக்குத் தன்மையை அதிகரிப்பது சம்பந்தமாக சுன்னுகம் கிளைத் தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் டாக்டர் தி. வருணலிங்கம், டாக்டர் திருமதி சுமனாதேவி தனபாலசிங்கம் ஆகியோர் செயல்முறை விளக்கம் அளிப்பார்கள். [மா]

## சேமிப்பு ஊக்குவிப்பு செயற்திட்டம்

(கொழும்புத்துறை நிருபர்)

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் சங்க அங்கத்தவர்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதற்கான செயற்திட்டத்தைத் துரிதமாகநடைமுறைப்படுத்தி வருகின்றது.

சகல அங்கத்தவர்களும் தாம் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாணயசங்கங்களில் சேமிப்பை ஏற்படுத்திக்கொள்ளுமாறுஅறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாதாந்தம் குறைந்தது 10 ரூபாவாவது சேமிப்பிலிட்டு வருமாறும், இப்பணத்தைச் சங்கம் மூலம் சமாசத்தில் செலுத்த வேண்டுமென்றும், அங்கத்தவர்களின் சேமிப்புக்கு வட்டியும் பொருளாதார உதவிகளும் வழங்கப்படுமென்றும், வீடமைப்புக் கடன் உட்படச் சகல கடன் வசதிகளும் சேமிப்புக் கணக்கு உள்ளவர்களுக்கே வழங்கப்படுமென்றும் யாழ்.மாவட்ட ஐக்யிநாணய சங்கங்களின் சமாஜ நிர்வாகச் செயலாளர் லோ. வாகீசன் தெரிவித்தார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் நாகமணி சிவஞானம்

அன்னைமடியில்: 30- 5- 44
அலைகடல் மடியில்: 12- 5- 87


எமது குடும்ப ஒளி விளக்காய் திகழ்ந்து எம்மை வழிநடத்திய குலவிளக்கே. எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென பிரிந்து எங்கு சென்றீர்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியும் எல்லாவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி. இன்று ஞாயிற்றுக்கிழமை (5- 7- 1987) நடைபெறும் மகேஸ்வர பூசையில் இந்துஇளைஞர் சங்கத்தினரையும், உற்றார், உறவினர்களையும் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
பெற்றோர்,சகோதரர், மனைவி, மகன், மருமக்கள்.
புதுத்தோட்டம்,
தெல்லிப்பழை.

(சி-9684)

## நினைவஞ்சலி





திரு. திருமதி பெரியதம்பி கந்தையா
(சிவலிங்கப்புளியடி)
(10-06-07 — 16-06-86) (22-08-17 — 28-05-85)

என்னையும் அழையுங்கள்

P. K. பாலசிங்கம்

718, கே. கே. எஸ். வீதி,
'சங்கரியா வளவு' யாழ்ப்பாணம். (சி-9691)

# இந்தியாவுடனான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதிலும் இந்த அரசாங்கத்தைப் பதவியிலிருந்து அகற்றுவதிலும் எமக்குள் ஒற்றுமை இருக்கின்றது என்று திருமதி பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கம் உள்ளூராட்சிமன்றங்களுக்கும் பிரதேசசபைகளுக்கும் தேர்தல் நடத்த விரும்புவதுடன் வடக்கு கிழக்கில் உபதேர்தல்களையும் நடத்த விரும்புகின்றது இவைகளைப் பகிஷ்கரிக்க நாம் முடிவு செய்துள்ளோம். அங்கீகரிக்கப்படாத வேறுபல கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன, என்று கூறிய திருமதி பண்டாரநாயக்க தமிழர் விடுதலைக்கூட்டணியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனவென்றார்.

1971-ம் ஆண்டு உருவான கிளர்ச்சியின்போது இந்தியாவும், பாகிஸ்தானும் தான் முதன்முதலில் இலங்கைக்கு உதவமுன்வந்தனவென்றும் அதைத்தொடர்ந்து யூகோஸ்லாவியா, பிரிட்டன் போன்ற நாடுகளும் உதவ முன்வந்தனவென்றார்.

அவர் மேலும் பேசுகையில் இன்று நாடு போதைவஸ்துக்களின்இருப்பிடமாக மாறிவிட்டது. எல்லா இடங்களிலும் சூதாட்டமுகாம்கள் தோன்றிவிட்டன, இவைகளுக்கு மேலாக குதிரைப்பந்தயமும் அனுமதிக்கப்படப்போகிறது என்றார்.

வடக்கில் பிரச்னைகள் மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கும் ஜனாதிபதிப்பதவிக்கும் நடந்த தேர்தல்களையடுத்துத்தான் குழப்பங்கள் ஆரம்பித்தன என்று கூறிய திருமதி பண்டாரநாயக்க, வடக்கு கிழக்கில் ஜனாதிபதி தேர்தலின்போது மக்கள் விளக்குக்கு எதிராக வாக்களித்தனர். அங்கேயும் மக்கள் பொதுத்தேர்தலையே விரும்பினார்கள் என்பதை இதுகாட்டியது.

இரகசிய பொலிசார் தம்மை விசாரித்ததுபற்றி குறிப்பிட்ட திருமதி பண்டாரநாயக்க இப்படியான பயமுறுத்தல்கள் எம்மை ஒன்றும் செய்துவிடமுடியாது மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. மக்கள் பொறுமை இழக்கும்போது ஜனாதிபதிக்கு இந்த நாட்டிலேயே இருக்க முடியாமல் போய்விடும் என்றார் திருமதி பண்டாரநாயக்க.

---

## வேலணை ப. நோ. கூ. சங்கம் வேலணை

## பதவி வெற்றிடம்

### கிளைமுகாமையாளர்

**கிளைமுகாமையாளர்**
**தரம்: 308 : 13.**

மேற்படி பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

225 - 10 தர 7 : 12 50 தர 8 - 395

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட அலவன்ஸும் வழங்கப்படும்.

கல்வித்தகைமை;

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்டத்தின் 15வது சம்பளத்திட்டத்தில் தொடர்புடைய பதவியில் 5 வருட அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் தராதர கல்விச் சான்றிதழ் (சா.த) அல்லது கல்விப்பொதுத் தாராதரப் பத்திரம் (சா. தரத்தில்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பின்வரும் பாடங்கள் உட்பட எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம், கணிதம் அத்துடன் தமிழ் பாஷை.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் பத்திரங்களை தலைமைக் கந்தோரில் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி 11-7-87 சனிக்கிழமை மு. பகல் 11 00 மணி.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,

**பொதுமுகாமையாளர்**

[ஏ 138[

---

## எல்லைக்காந்தி திடீர்சுகயீனம்

(புதுடில்லி)

எல்லைக்காந்தி கான் அப்துல்கபார்கான் திடீர் பக்கவாத நோயின் காரணத்தால் புதுடில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ மனையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (ரா)

---

## இந்திய உணவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் விநியோகத்தின் உள்ளார்த்தத்தைப் புரிந்துகொண்ட இலங்கைப்படையினர் தமது தாக்குதலை ஓரளவு தளர்த்தியுள்ளதாகவும் கூறினார்.

உணவு விநியோகம் முற்றுப்பெற்றவுடன் படையினர் பெரிய அளவிலான தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்த அவர் தமிழர் பிரதேசசங்களைபடையினர் கைப்பற்றினாலும் கூட கடைசி வரை போரை நிறுத்தமாட்டோம் என்றும் கூறினார். (ரா)

---

## அலஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெறவுள்ள இந்த விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளிக்க யாழ்ப்பாணத்திலுள்ள பொது நிறுவனங்கள். தனிநபர்கள், அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்

இக்கமிஷன்முன் சாட்சியமளிப்பதற்கு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்கினியன் இம் மாதம் எட்டாம் திகதி கொழும்பு செல்லவுள்ளார்.

இச் ஷெல் தாக்குதலினால் ஒன்பது நோயளர்களும் வைத்தியசாலை ஊழியர் ஒருவரும் இறந்ததுடன் இருபது நோயாளர்கள் படுகாயமடைந்தது தெரிந்ததே. [ஒ]

---

## வடக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யும் இறுதிநாள் நேற்று முன்தினம் நண்பகலுடன் முடிவடைந்தது.

வடபகுதியில் எவரும் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை.

நாடெங்கிலும் 257 பிரதேச சபைகள் வடக்கு . கிக்க்குப் பகுதிகளில் 60 பிரதேச சபைகள் உண்டு.

கிழக்குப்பிரதேசத்தில் முஸ்லிம் பகுதிகளிலுள்ளசபைகளுக்கு நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தமிழர் எவரும் முன்வரவில்லை.

### மலையகத்தில்

மலைநாட்டில்உள்ள பிரதேசபைகளுக்கு ஐ தே க வின் பட்டியலில்உள்ள இ தொ கா பிரதிநிதிகளுக்கு 31 பிரதேச சபைகளில் இடம் கிடைத்துள்ளன.

12மாநகரசபைகளில் 3மாநகர சபைகளுக்கு இ தொ. கா பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்

ஐ தே. க. வேட்பாளர்பட்டியலில் இ தொ.கா. சார்பி 65 பேருக்கு மட்டுமே இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இ.தொ கா. பிரதிநிதிகளுக்கு நுவரெலியா, பதுளை. கொழும்பு ஆகிய மாநகரசபைகளிலும் இடம் வழங்கப்பட்ட போதிலும் மாத்தளை மாநகர சபையில் ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் இ. தொ.கா. வினரின் பெயர்கள் தவிர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

### ஏறுவூர்

ஏறுவூர் பிரதேச சபைக்கு ஐ. தே. க. போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளது எஸ். ரஸாச் தலைமையில் இப்பட்டியல் இடம்பெற்றுள்ளது

வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசசபைகளுக்கு சுயேச்சைக்குழுக்கள் போட்டியின்றி தெரிவாகின.

வாழைச் சேனையில்ஏ. பி. யூசுப் பாவா ஹாஜியாரும், ஓட்டமாவடியில் ஏம். ஏ எம் புகாரியும் குழுக்களுக்கு தலைமைவகிக்கின்றனர்,

காத்தான்குடி பிரதேசபைக்கு கே. அபூபக்கர் தலைமையில் ஐ. தே க வும் எம். எல் ஏ. எம். ஹிஸ்புல்லா தலைமையில் சுயேச்சைக்குழுவும்போட்டியிடுகிறது.

### அம்பாறை

அம்பாறை மாவட்ட நகர சபைக்கு ஐ தே.க வும் சுயேச்சைக்குழுவும்போட்டியிடுகிறது மற்றும் 15 பிரதேசசபைகளில திருக்கோயில், ஆலையடிவேம்பு ஆகியவற்றுக்கு எவரும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

அட்டாளைச்சேனை, பொத்துவில், கல்முனை. சம்மாந்துறை ஆகியசபைகளுக்கு ஐ. தே.க முஸ்லிம்காங்கிரஸ் ஆதரவுள்ள சுயேச்சைக்குழுகக்ள் போட்டியிடுகின்றன.

நிந்தாவூரிலும்கருங்கொடித்தீவிலும் இரு சுயேச்சைக்குழுவும் ஐ.தே-க.வும் மோதுகின்றன

சிங்களப்பகுதிகளிலுள்ள 7 பிரதேச சபைகளில் ஐ. தே.க மூன்றில்போட்டியின்றித் தெரிவானது. மற்றைய நாலும் சுயேச்சைக்குழுவுடன் போட்டியிடுகின்றன.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் 11 பிரதேச சபைகளில் 4 பிரதேச சபைகளுக்கு நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

### வவனியாவில்

வவனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேசசபைகளில் வவனியா தெற்கு சிங்களப் பிரதேசசபைக்கு சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடுகின்றன

வடபகுதியில் பிரதேசசபைகள் யாழ் மாவட்டத்தில் 12ம், மன்னாரில்4 ம், முல்லைத்தீவில் 4ம்இருந்தபோதிலும்இவற்றுக்குப் போட்டியிட எவரும் முன்வராதது குறிப்பிடத்தக்கது. (மா)

---

## இந்திய உணவுப்பொருள்களை இறக்க காங்கேசன் சென்ற ஊழியர் உச்சி வெயிலில் நிறுத்தப்பட்டனர்

பலாலி, சனி

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பொருட்களை இறக்க சென்ற தொழிலாளர்களை கொளுத்தும் வெயிலில் படையினர் நிறுத்திவைத்ததாகக் கூறப்படுகிறது.

இந்திய நிவாரணப் பொருட்களை கப்பலிலிருந்து இறக்குவதற்காக மாவிட்டபுரம் ஊடாக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு சென்ற 150 தொழிலாளர்களையுமே சென்றியில் நின்ற படையினர் 'நீங்கள் புலிகள்'' எனக் கூறி பல மணி நேரம் நிறுத்தி வைத்து பிற்பகல் 2 மணியளவில் வந்த பாதைநோக்கி செல்ல வேண்டும் என்று கூறி அனுப்பினார்களாம். (ரா)

---

## வடக்கு, கிழக்கில் தேர்தல் வேட்பாளர் எத்தனை நாட்களுக்கு உயிருடன் இருப்பார்கள்

### - சிறிமா கேள்வி

[கொழும்பு]

"இன்றைய அரசின் பிழையான நடவடிக்கைகளினாலேயே வடக்கு. கிழக்கு தமிழ் இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாறினார்கள்'' என்று முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கத்தின்மேல் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் பேசும்போதே அவர் இக் குற்றச்சாட்டினைத் தெரிவித்தார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தொடர்ந்து அங்கு பேசுகையில் யாழ்ப்பாண வாசிகசாலை ஆசியாவிலேயே தலைசிறந்த ஒன்றாகும். அந்த வாசிகசாலை தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன், மாவட்ட சபைகளுக்கான தேர்தல் வடபகுதியில் நீதியான முறையில் நடத்தப்படவில்லை. இது போன்ற பல காரணங்களே வடக்கில் தீவிரவாதம் மேலும் உக்கிரமடைவதற்கு காரணமாக அமைந்தன.

அரசாங்கம் வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தப் போவதாகத் தம்பட்டம் அடித்து வருகிறது. அப்படி அங்கு தேர்தல் நடந்தால் வேட்பாளர்களாக எத்தனை பேர் நிற்கப்போகிறார்கள் போட்டியிடும் வேடபாளர்கள் எத்தனை நாட்களுக்கு உயிருடன் இருப்பார்கள் என்றும் கேள்வி எழுப்பினார். (ரா)

---

## இலங்கை விவகாரத்தில் சோவியத் தலையிடுவதாக கூற எம்மிடம் ஆதாரமில்லை —லலித்

[வாஷிங்டன்]

"இலங்கை இனப்பிரச்னையில் சோவியத் ரஷ்யா சம்பந்தப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. இப்பிரச்னையைச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கையில் காலடிவைப்பதற்கு அது முயற்சிகளை மேற்கொள்வதாக வேறு சிலர் கூறுகின்றனர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை.

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் அத்துலத்முதலி மிசூரியில் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் கல்விமான்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

இலங்கை இனப்பிரச்னையில் வெளியார் தலையீடு உள்ளதாவெனக் கேட்கப்பட்ட போது, சில தமிழ் இளைஞர்கள் பலஸ்தீன விடுதலைக்கான "பொப்யுலர் புறன்ட்'' என்னும் இயக்கத்தால் பயிற்சியளிக்கப்பட்டனரெனக் கூறிய அமைச்சர் பலஸ்தீன விடுதலை இயக்கம் இதில் பங்குபற்றவில்லையெனத் தெரிவித்தார். இத்தவேளை சில தமிழ் இளைஞர்கள் லிபியா சென்றிருந்தனரெனக் கூறியஅவர் அவர்களுக்கு அங்கு என்ன நடந்ததெனநீ தமக்குத் தெரியாதெனக் குறிப்பிட்டார்.

தமிழ் இளைஞர்களின் இயக்கங்களுக்கு மூன்றுவகையில் நிதிகிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார் முதலாவதாக அயல்நாடான தமிழ்நாடு இவர்களுக்கு நிதிவழங்குகிறது இரண்டாவதாக பிரிட்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களிடமிருந்து கிடைக்கிறது; மூன்றாவதாக போதைவஸ்து கடத்தல் மூலம்கிடைக்கிறது இவ்வாறு அமைச்சர் லலித் கூறினார்?

---

## எந்தவொரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த சோவியத் செய்திஸ்தாபன 'நொவொஸ்கி' அமெரிக்கா திருகோணமலைத்துறைமுகத்தில் கடற்படைத்தளமொன்றை அமைப்பதன் முயற்சியாக, இப்பிரச்னைத் தீர்வுக்கு ஒருமுட்டுக் கட்டையாகவுள்ளதெனக்குறிப்பிட்டிருந்தது.

இந்துசமுத்திரத்தில் ஒரு நாசகாரி உட்பட30 போர் கப்பலை வைத்திருக்கும் அமெரிக்கா புத்தளத்தில 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' நிலையத்தையும் அமைத்துவருகிறது. இந் நிலையம் தெற்காசியநாடுகள் உட்பட சோவியத் ரஷ்யாவின் கிழக்குப் பகுதிவரை தனது அலைமாற்றியைக் கொண்டதாக அமைகிறது. அத்துடன் போர் நடவடிக்கைகளில் ஈடுபடும்நீர் மூழ்கிக் கப்பல்களுக்கும் இந் நிலையம் செய்திகளைக்கொடுக்கும் சக்தியைஉடையதுஎனவும் அச்செய்தித்தாபனம்குறிப்பிட்டிருந்தது.

மேலும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தை சமாதான வலயமாகப் பிரகடனம் செய்யும் யோசனைகளையும் அமெரிக்கா ஆதரிக்கவில்லை அமெரிக்காவின் இந் நடவடிக்கை வல்லரசுகளிடையே இப்பிராந்தியத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே அமைந்துள்ளதென அச்செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

---

## வடமராட்சியில் 25 இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெல்லியடி மடத்தடி. கூவிமாயக்கை ஆகிய பகுதிகளை நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 25க்கு மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களுடன் 45 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

வீட்டில் ஒரு பலகையில் பல ஆணிகளை அறைந்து வைத்திருந்ததனாலேயே 45 வயது நபர் கைது செய்யப்பட்டாரெனக் கூறப்படுகிறது.

---


## முக்கிய அறிவித்தல்

சிவன் வைத்தியசாலை முறிவு நெரிவு வைத்திய நிபுணர் மலையாள வைத்தியர் த. சோமசுந்தரம் தொடர்ந்தும் இல 352, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அதே இடத்தில் வைத்தியம் செய்கிறார் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகிறேன்.

**டாக்டர். த. சோமசுந்தரம்,**
**முறிவு நெரிவு வைத்திய நிபுணர்,**
352, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-9717)

## பொலிசாருக்கெதிரான மனிதஉரிமை மீறல் வழக்கு

# மனுதாருக்கு 10,000 ரூபா நஷ்டஈடு

# வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் பாதுகாப்பில் உள்ளபோது பொலிசாரினால் தான் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டி இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 4 பொலிசாருக்கெதிராகப் பாணந்துறையைச் ,சேர்ந்த நபர் ஒருவர் தொடர்ந்த வழக்கில் அவர் வெற்றிபெற்றதுடன் நஷ்ட ஈடாக 10,000 ரூபாவை வழங்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

பாணந்துறையைச் சேர்ந்த திரு அமல் சுதத் சில்வா தான் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுப் பாணந்துறைப் பொலிஸ் நிலையத்தில் காவலில் வைத்திருக்கப்பட்டபோது சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதாகவும் பொலிசாரினால் மனிதநேயமற்ற முறையில் நடத்தப்பட்டதாகவும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் இவ்வழக்கை விசாரணை செய்த நீதியரசர் குழு தனது தீர்ப்பில் அரசியல் யாப்பின் 11-வது ஷரத்து மூலம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் இவ்விடயத்தில் மீறப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துவதில் வாதி வெற்றிபெற்றுவிட்டார். தமது பொறுப்பிலுள்ள சந்தேக நபர்கள் மீது சில பொலிஸ் அதிகாரிகள் மேற்கொள்ளும் 3-ம் தர நடைமுறைகள் குறித்து இந்த வழக்கு வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய நடைமுறைகள் காட்டுமிராண்டித்தனமானவை, மனிதநேயமற்றவை ஏனறே விமர்சிக்கப் படமுடியும் என்று தெரிவித்துள்ளது.

இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மாஅதிபர் நீதிமன்றம் விடுத்த உத்தரவில் இந்தச் சித்திரவதைகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பதற்குரிய விசாரணைகளை நடத்தக் கூறியுள்ளார்.

திரு. சில்வாவுக்கு நஷ்ட ஈடாக 10,000 ரூபாவும் வழக்குச் செலவாக 1,000 ரூபாவும் செலுத்தும்படியும் அரசாங்கத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 4 பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் மாஅதிபர், சட்ட மாஅதிபர் ஆகியோர் முறையே 5-ம், 6-ம் பிரதிவாதிகளாக வாதியினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஊ)

## இராணுவத்தினரின் சூட்டுக்கு இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வசாவிளான் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு வசாவிளானைச் சேர்ந்த குமார் [19 வயது] என்பவர் படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [கு]

## நயினாதீவு உற்சவம்: விசேஷ படகுசேவைகள்

யாழ்ப்பாணம்,ஞாயிறு

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் உற்சவத்தையொட்டி நயினாதீவு- குறிகாட்டுவானுக்கிடையில் விசேஷ படகு சேவை ஒழுங்கு செய்யப்பட்டு தற்பொழுது நடைபெற்று வருவதாக யாழ் செயலக பொதுசன தொடர்பு அதிகாரியும் மேற்படி ஆலய அறங்காவல் சபையின் தலைவருமான குலசேகரம் தெரிவித்தார்.

கோயில் உற்சவம் முடியும் வரைக்கும் காலை ஏழு மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் இடையில் நயினாதீவு- குறிகாட்டுவான் படகுசேவை நடைபெறும் என்றும் தெரிவித்த அவர் நயினாதீவிலிருந்து காலை ஏழுமணி, எட்டுமணி, பத்துமணி மாலைஇரண்டரை, மூன்றரை மணிக்கு படகு புறப்படும். குறிகாட்டுவானிலிருந்து காலை ஒன்பதுமணி பதினொருமணி, இரண்டுமணி, நாலுமணிக்கு நயினாதீவை நோக்கி படகு புறப்படும் என்றும் கூறினார்.

மேலும் தேர், தீர்த்த நாட்களில் விசேஷ சேவை இடம் பெறும்.

புதன்கிழமை சப்பறமும், வியாழக்கிழமை தேரும், வெள்ளிக்கிழமை தீர்த்தமும், சனிக்கிழமை தெப்பத்திருவிழாவும் இடம் பெறும்.

அம்பாளை தரிசிக்க வரும் அடியார்கள் அடையாள அட்டைகளுடன் வருமாறு வேண்டப்படுகின்றனர்.

## கட்டுநாயக்கா விமானநிலையத்தில் ஆஸ்திரேலியா செல்லவிருந்த 43 தமிழர்கள் கைது

(கொழும்பு)

ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் சென்ற 43 தமிழர்களை விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவர்களில் 22 பேர் ஆண்கள், 11 பேர் பெண்கள், 10 பேர் பிள்ளைகள் இவர்கள் அனைவரும் வடபகுதித் தமிழர்கள் என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள ஆஸ்திரேலியாவுக்கு மோசடி செய்யப்பட்ட கடவுச் சீட்டுமூலம் செல்வதற்கு முயற்சி செய்தார்களென்றும். எனவே தான் அவர்களைக் கைது செய்ததாகவும் குடிவரவு அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் இப்போது மேல் விசாரணைக்காக கட்டுநாயக்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய கடற்றொழிலாளர் கைது

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் ஏழுஇந்தியக் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

காரைநகர் கடற்படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களை மீட்பதற்காக இந்திய வெளியுறவு ஆமைச்சு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டது. [ரா]

## தொண்டமானாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதையடுத்து பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ட்ரக் வண்டியும் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தின் பின் இருதரப்பினருக்குமிடையில் பலத்த மோதல் நடைபெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## மரண அறிவித்தல்

### செல்வன் செல்வமணியம் ஞானேந்திரன்




முன்னாள் எயர்சிலோன் ஊழியரும் தற்போது விநாயகர் ரேடிங் கம்பனியில் கடமையாற்றுபவருமாகிய செல்வமணியம் நாகரத்தினம் தம்பதிகளின் அருமை மகன் செல்வன் ஞானேந்திரன் கடந்த திங்கட்கிழமை 29-06-87 அன்று மேற்கு ஜேர்மனியில் தீ விபத்தில் மரணமானார். இவர் காலஞ்சென்ற முத்துச்சாமியின் பேரனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் கமலாம்பாள், கிருஷ்ணசாமி ஆகியோரின் பெருமகனும், யோகேஸ்வரியின் சகோதரரும், சண்முகலிங்கத்தின் மைத்துனரும், காலஞ்சென்ற வாலாம்பிகை, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், வரதராஜா றெங்கநாதன், புனிதமா, கருணாதேவி, இந்திராணி, இராசமணி, ஜெகதாம்பாள் ஆகியோரின் மருமகனும், செல்வி ராதையின் அன்பு மாமனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
M. S. மணியம்.

122/5, 4ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

சி-9721

### திரு. சுப்பையா சத்தியானந்தம்



சுன்னாகம் மேற்கு பருத்திக்கலட்டியைச் சேர்ந்த சுப்பையா சத்தியானந்தம் (அப்புச்சி) 24-06-87 அன்று லிபியாவில் நடந்த விபத்தில் அகால மரணமடைந்தார். அன்னார் அமரர் சுப்பையா, திருமதி சரஸ்வதி சுப்பையாவின் அன்பு மகனும், செல்வராசா (யாழ்.அபிவிருத்தி உபஅலுவலகம், சுன்னாகம்), சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோஸ், கந்தரோடை மேற்கு), சற்ஸ்கந்தராசா), சிவராசா (மெக்கானிக்கல் வேக்ஸ் சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை), தங்கராசா (சவுதி அரேபியா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், சீலாவதி, யோகேஸ்வரி, தவராணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், வனிதா, ஜெனிதா, சுஜீதா, சுதர்சன், சுதர்சினி, கமல்ராஜ், கவியன், ஆத்தைக்குட்டி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். [சி-9720]

## பாதிப்புக்களை இப்படி அறிவிக்க வேண்டும்

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் பாதக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை நான்கு பிரதிகளில் தயாரித்து சமாதான நீதிபதியின் முன்னிலையில் கையொப்பமிட்டு ஒப்படைக்கவேண்டும்

இரண்டு பிரதிகளை உதவி அரசாங்க அதிபரிடமும், ஒன்றைத் தமதுபகுதி பிரஜைகள் குழுவிடமும சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ஒன்றை தம்முடன் வைத்திருக்கவேண்டும் என்றும் அச்சுவேலி பிரஜைகள் குழு அறிவித்துள்ளது.

## 60 ஜே. வி. பி. அங்கத்தவர்கள் கைது

(கொழும்பு)

தடைசெய்யபபட்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி ) இயக்கத்தைச் சேர்ந்த அறுபதுபேர் குருநாகல் மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசவிரோத செயல்களில் ஈடுபட்டிருந்த பொழுதே அவாகள் கைதுசெய்யப்பட்டதாக கூறப்பட்டது. (ரா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.

## வீட்டில் நின்றவர் மீது இராணுவம் துப்பாக்கிசூடு

யாழ்ப்பாணம், ஞாயிறு.

மந்திகையில் நேற்று முன்தினமிரவு இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் நான்கு வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவந்துள்ளதாவது: சம்பவதினமிரவு காயமடைந்த கந்தையா சந்திரன் (வயது 29), என்பவர் சுமார் 8 மணியளவில் முகாமிற்கு அருகிலுள்ள தமது வளவில்நின்றபோது சென்றியிலிருந்தமுகாம் ராணுவத்தினர் அவரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் படுகாயமடைந்தார்.

சென்றி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து முகாமிலிருந்தும் சரமாரியான வேட்டுக்கள் சுமார் முப்பது நிமிடங்களுக்கு மேலாகத் தீர்க்கப்பட்டன. இதனால் பீதியடைந்த அப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு வெளியேறியுள்ளனர். காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (கு]

## மேலிடத்தின்உத்தரவையடுத்துசென்ற தமிழ் பொலிசார் கடமைக்கு அனுமதிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொலிஸ் உயர்மட்டத்திலிருந்து கிடைத்த உத்தரவையடுத்து நேற்று மந்திகை பொலிஸ் நிலையத்துக்குக் கடமைக்குச்சென்ற தமிழ் பொலிசார், பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியால் திருப்தயனுப்பட்டனரெனத் தெரியவந்துள்ளது.

இவர்கள்மந்திகை பொலிஸ் நிலையம் சென்றபோது, தங்களுக்கு எதுவித அறிவுறுத்தலும் மேலிடத்திலிருந்துகிடைக்க வில்லையென்றும் தாம் பொலிஸ் அத்தியட்சருடன் தொடர்புகொண்டு முடிவு கூறுவதாகவும், எனவே நாளை திங்கட்கிழமை அங்கு வருமாறும் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி இவர்களிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இத்தமிழ்பொலிசார் முன்பு கோட்டைபொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவர்களாவர். பாதுகாப்பின்மை காரணமாகஇவர்கள்கடந்த மூன்று மாதங்களாக கோட்டை பொலிஸ் நிலையத்திற்குக் கடமைக்குச் செல்லவில்லை. (கு)